43

ஸர்வதாரி ஸு
ஐப்பசி மீ

ஸம்புடம் - 7
ஸஞ்சிகை - 10

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 OCT 1948
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

:ப்ரசுரிக்குமிடம்:

நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, த்யாகராயநகர்,
சென்னை.

3L
189251

October 1948
Vol. 7 No. 10

விஷய ஸூசிகை.

பக்கம்.

1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	244
2.	நற்போது போக்கு	247
3.	தத்வ ஹித புருஷார்த்தங்கள்	249
4.	திருப்பாவை	253
5.	மதுராலாபம்	257
6.	திருக்கண்டியூர்	259
7.	பஞ்சாங்க ஸங்க்ரஹம்	265
8.	செய்திகள்	266
9.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	268

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்.

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள், மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ப்ரசுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்க ளெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்ய வேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடை நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருகிறது. அவகாசம் ப்ராப்தமாகும் பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

OFFICE OF THE REGISTRAR OF BO[OKS]
6 OCT 1948
MADRAS

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 7	ஸர்வதாரி ௵ ஐப்பசி மீ	ஸஞ்சிகை 10

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிய மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:
ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[7-ம் அங்கம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

ப்ரதிஜ்ஞாபூர்வ தாரண க்ருதக்ஷணஹாரத மநோரதஸிம்ஹாஸநாதிரோஹண ந.
ராமனுடைய ஸீதா விரஹ ஶோகத்தைக்காட்டிலும் பரதனுடைய ராம விரஹ ஶோகம் மிகப் பெரியது. 'ரகூத்தமரே! நீரே ஜ்யேஷ்டர்; நீரே குணங்களிலும் மிக்கவர்; உம்முடைய வநவாஸ ப்ரதிஜ்ஞை பதினான்கு வர்ஷம்; அந்தக் கெடு முடியும்வரையில் மட்டுமே நீர் ராஜ்யம் ஆளாதிருப்பதை நான் ஸஹிக்கக் கூடும்; அதன்பின் ஒரு க்ஷணமேனும் தாமதத்தை நான் ஸஹியேன்.'

"யாவந்ந ராஜ்யே ராஜ்யார்ஹ: பிதுர்வசந பாலக: ।
அபிஷேகஜலக்லிந்ந: ந மே ஶாந்திர்பவிஷ்யதி ॥"

என்று ராம ஸிம்ஹாஸந மநோரதத்திலேயே நிற்பவர் பரதன். 'பதினான்கு வர் முடிந்த அதே தினத்தில் வனத்திலிருந்து திரும்பிய உம்மை ஸேவித்து உமது பரிஷ்வங்கம் பெறவேண்டும். இல்லையேல் அக்நி பரிஷ்வங்கம் பெறவேண்டும். உம்மைக் கூடாத விரஹாக்நியிலும் அது கொடியதல்ல என்கிறார். பதினாலு வர்ஷம் கடந்த மறுதினம் பஞ்சமியில் ராமதர்ஶநம் அல்லது பஞ்சத்வம்என்று த்ருட ப்ரதிஜ்ஞை. அந்த ப்ரதிஜ்ஞையிலே க்ருதக்ஷணர். (கவனமுடையவர்) பரதன். ராமனுடைய ஸிம்ஹாஸநாதிரோஹத்தில் பரதனே பெரு மகிழ்ச்சி யுடையவர். அதையே பாரித்துக்கொண்டு சித்ரகூடத்திற்கு எல்லோருடனும் வந்து ராமனை ஶிரஸா யாசித்தார். 'ப்ராயோபவேஶம் செய்வே' னென்றார். பஞ்சமீ தினத்திலேயே ஹநுமான் முகமாக ராமா கமநத்தைத் தெரிந்துகொண்டார். இங்கு ஸ்வாமி,

"உபாத்த வாணீம் உநவ: ப்ரஹர்ஷிணீம் ஶிரஸ்ய பாதுகா: பரதே மநோரத:"
என்ற ச்லோகத்தை ஸூசநம் செய்கிறார். ராமன் பரத்வாஜாச்ரமத்திலிருந்து பரதாச்ரமம் வந்ததும் ராம பாதுகைகளை யெடுத்து ஸ்ரீ ராம சரணங்களில் சேர்த்துவைத்து,

"ஏதத்தே ரக்ஷிதம் ராஜந் ராஜ்யம் நிர்யாதிதம் மயா ।
அத்ய ஜந்மக்ருதார்த்தம் மே ஸம்வ்ருத்தஶ்ச மநோரத:॥"

என்று கூறிய பரத வசநத்தையும் ஸூசிக்கிறார்.

"யாவந்ந ப்ராப்ததே அகூ ம் யாவதீ அ வஸாநா ।
தாவந்நீஹ ஸ்வப்ய ஷாரிகவமநாவதய ॥"

189251

என்ற பரத வசநத்தைக் கேட்டவுடனே 'அப்படியே' யென்று ராமனும் இசைந்து 'நிஷஸாதாஸநே ஶுபே' என்று கூறியதையும் ஸூசிக்கிறார். பரதன் மநோரதம் பூர்ணமா யிராவிடில் 'ஸிம்ஹாஸநம் வேண்டாம்' என்று

'ஸங்கத்யா பரத: ஶ்ரீமாந் ராஜ்யேநார்தீ ஸ்வயம் பவேத் ।
ப்ரஶாஸ்து வஸுதாம் க்ருத்ஸ்நாம் அகிலாம் ரகுநந்தந:॥"

என்று கூறிய ராம வசநத்தையும் ஸூசிக்கிறார். 'பரதாழ்வான் பண்ணின ப்ரபத்திக்காக மீண்டு திருவபிஷேகம் பண்ணி ராஜ்யம் பண்ணுகையும்' என்பது அபய ப்ரதாநஸாரம்.

திவ்ய ஸபாயோத்யாதிதைவதே ந—அயோத்யா ராஜ்ய ஸிம்ஹாஸநத்தில் இன்றுதான் ஏறினாரோ? 'அயோத்யா' என்று பரமபதத்திற் கல்லவோ முக்யமான திருநாமம்? அந்த ராஜ்யத்திற்கு இவர்தானே ஸர்வாதிகாரான அதிதைவதம். அந்த ஸிம்ஹாஸநத்தில் இவர் நித்யாரூட ரல்லவோ? பரமபத நாதன் ராமனாகி ஸாகேத மென்ற இந்த நகரத்தில் ராஜ்யம் ஆளப்போகிறார் என்று இதற்கும் அந்த 'அயோத்யா' என்ற திருநாமம் வந்ததுபோலும். திவ்யமாகிய அயோத்யைக்கு இவர் நித்யமே அதிதேவதைதான். பூமியிலுள்ள அயோத்யைக்கு இன்றுதான் அதிதேவதையானா ரென்கிறார். இவரே த்ரிலோக நாதனா பரதேவதை யென்று லங்கையிலேயே ப்ரகாஶமாய்விட்டது. 'ப்ராத்ரு ஸஹித ராஜ்யஸ்ய:' என்று தஶரதர் இட்ட கட்டளை யிட்டபடி பரதாதி மூன்று ப்ராதாக்களோடும் ராமன் ராஜ்ய பரிபாலநத்தை ஏற்றுக்கொண்டார். இவரை அதிராஜ ரென்று சொல்வது போதாது; அதிதேவதை யென்பது ப்ரஸித்தமாய் விட்டது. 'தேவாநாம் தாநவாநாம் ச ஸாமாந்ய மதிதைவதம்'. அப்பொழுது லங்கா ராக்ஷஸர்களுக்கும் அதிதைவதம்.

ஜாநகீஸஹ யஜ்ஞசாரிணா—விவாஹ காலத்தில் 'ஸஹ தர்மம் சர தவ' என்ற ஜநகர் வசநத்தை 'ஜாநகீ' என்ற ஶப்தத்தால் ஸூசிக்கிறார். க்ருஷ்ணன் ப்ராஹ்ம முஹூர்த்தத்தில் எழுந்திருந்து ஆசமநம் செய்து 'தத்யௌ ப்ரஸந்ந கரண: ஆத்மாநம் தமஸ: பரம்' என்று தன்னையே த்யாநம் செய்து ஸ்வதர்மங்களை வழுவாது நடத்தியதை சுகர் '70-வது அத்யாயத்தில் வர்ணித்தார். தர்ம விக்ரஹமாகிய தம்மையே லோக ஸங்க்ரஹார்த்தமாக ஆராதித்துக் காட்டினார். 'க்ருதாஸ்விஷ்டீஜே ஆத்மாநம் ஆத்மநிஷ்டம் ப்ரயயௌ ஜநேஷு' என்று சுகர் மகிழ்ந்து பாடினார்.

ஸர்வயஜ்ஞஸமாராதநீயே ந—'அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் போக்தா ச ப்ரபுரேவ ச' என்று ஸர்வ தர்மங்களும் விஷ்ணுவாகிய இவருடைய ஸமாராதநங்கள். மநுஷ்ய வேஷ மிருப்பதால் ஸகல தர்மங்களையும் தாம் ஆசரித்துக் காட்டுகிறார்.

ஸநாதநஶ்ரேயஸே—தாம் ஸித்தோபாயமான ச்ரேயஸ் ஸாதகர்.
'ஸ்வம் யஜ்ஞ: ஸ்வம் வஷட்கார:'

‘ 𑌬𑌹𑍍𑌵𑌾𑌵𑌰𑍍𑌣𑌂 𑌬𑌹𑍁𑌹𑌵𑌿𑌃 𑌬𑌹𑍍𑌵𑌨𑍍𑌨𑌂 𑌬𑌹𑍁𑌣𑌾 𑌹𑍃𑌤𑌮𑍍 ।
𑌬𑌹𑍍𑌵𑍈𑌵 𑌤𑍇𑌨 𑌗𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌬𑌹𑍁𑌕𑌷𑍍𑌟𑌸𑌹𑌾𑌯𑌿𑌨𑌾 ॥ ’

என்கிற ந்யாயமும் ஸூசிதம்.

𑌸𑌾𑌕𑍇𑌤𑌜𑌨𑌪𑌦𑌜𑌨𑌿𑌤𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌜𑌙𑍍𑌗𑌮𑌤𑌿𑌰𑌶𑍍𑌚𑌾𑌂 𑌜𑌨𑍍𑌤𑍁𑌜𑌾𑌤𑌦𑌿𑌵𑍍𑌯𑌗𑌤𑌿𑌦𑌾𑌨 𑌉𑌪𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌨𑌿𑌤𑍍𑌯𑌨𑌿𑌸𑍍𑌸𑍀𑌮𑌵𑍈𑌭𑌵𑌸𑍍𑌯—தமது தேஶத்தில் பிறந்த ஸ்தாவர ஜங்கமங்களுக்கும், திர்யக்குகளுக்கும் திவ்ய கதியை யளித்த பெருமை இந்த அருமையான அவதாரத்தின் எல்லையற்ற வைபவம். திவ்யாயோத்யையிலிருந்து பூமியின் அயோத்யையில் இறங்கி, இங்கிருந்தவர்களை யெல்லாம் திவ்யநாடு சேர்ப்பித்ததிலும் மிக்கதொரு கருணை யுண்டோ? ‘உபாயங்களில் அநதிகாரிகளான ஸ்தாவரங்களையும் கூட ‘ 𑌅𑌪𑌿 𑌵𑍃𑌕𑍍𑌷𑌾𑌃 𑌪𑌰𑌿𑌮𑍍𑌲𑌾𑌨𑌾𑌃 𑌸𑌪𑍁𑌷𑍍𑌪𑌾𑌙𑍍𑌕𑍁𑌰𑌕𑍋𑌰𑌕𑌾𑌃 ’ என்ற ஸ்நேஹத்தையும் விஷய வாஸனையையும் பற்றுசாகக்கொண்டு ரக்ஷித்தபடி பரக்கப் பேசப்பட்டது’ என்பது அபயப்ரதாநஸாரம்.

“ 𑌵𑌂𑌶𑌂 𑌰𑌘𑍋𑌰𑌨𑍁𑌜𑌿𑌘𑍃𑌕𑍍𑌷𑍁𑌰𑌿𑌹𑌾𑌵𑌤𑍀𑌰𑍍𑌣𑍇
𑌤𑌿𑌰𑍍𑌯𑌙𑍍𑌚𑍋𑌽𑌪𑍍𑌯𑌵𑌶𑌿𑌷𑍍𑌯 𑌤𑌯𑌾 𑌤𑍁 𑌸𑌵𑌰𑍍𑌗𑌣𑍈𑌃 ।
𑌸𑍍𑌵𑌸𑍍𑌥𑌾𑌨𑌿 𑌯𑍇𑌪𑍍𑌯𑌹𑌵𑌸𑍈𑌤𑍍𑌯𑌜𑌨𑍍𑌤𑌿 𑌯𑌥𑌾 𑌹𑌿
𑌵𑍃𑌕𑍍𑌷𑌾𑌶𑍍𑌚 𑌤𑌾𑌨𑍍𑌤𑍍𑌵𑌦𑌨𑍁𑌸𑌙𑍍𑌗 𑌸𑌵𑌿𑌯𑍋𑌗𑍇 ॥ ”

என்பது ஸ்ரீ ஆழ்வானுடைய அதிமாநுஷ ஸ்தவம். மரங்களெல்லாம் ராம ஸ்நேஹ ரஸத்திலேயே வளர்ந்து ஜலத்தால் வளர்வதையே மறந்துவிட்டன. ராம வியோகம் வரப்போகும்போது அந்த ரஸம் கிடைக்காதே யென்று அவை தவித்து வாடின. இத்தனை ஸ்நேஹமுடைய ஸ்தாவரங்களை ராமன் தம்முடைச் சோதிக்கு எழுந்தருளுகையில் பிரிய ஸஹிப்பரோ ? அவைகள் தான் ஸஹிக்குமோ ? ‘ 𑌚𑍈𑌤𑍍𑌯𑌾𑌙𑍍𑌕𑌿𑌤𑌾𑌨𑍍𑌯𑌯𑍋𑌧𑍍𑌯𑌾𑌸𑍂𑌰𑌵𑌰𑌜𑌨𑍍𑌮𑌨𑌾𑌂 ’ என்ற ஸாராவளி ச்லோகத்தில் சிந்தாமணியில் ‘ப்ரஹ்மலோகம் வரையில் ராமபத்ரரோடு கூடச் சென்றார்கள்’ என்றுள்ளது. ‘நற்பா லயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும், நற்பாலுக் குய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே’ என்று ஆழ்வார் இதைக் காட்டி ராம சரிதமான ஸ்ரீ ராமாயணம் தவிர, மற்றொன்றை நாட்டிற் பிறந்தவர் அப்யஸிப்பரோ என்று பாடியதையும் ஸூசித்து ராம சரிதத்தை முடிக்கிறார்.

𑌭𑌗𑌵𑌤𑌾—இந்த ஶப்தம் பரமாத்மாவான நாராயணனைத்தான் முக்யமாகக் குறிக்கும்; ஆகையால் ராமன் நாராயணனே என்பது ஸூசிதம்.

𑌸𑌜𑍍𑌜𑌨𑌾𑌭𑌿𑌰𑌾𑌮𑍇𑌣 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑍇𑌣—‘ ராமன் ’ என்பது வஸிஷ்டர் இட்ட திருநாமம். தாரக மந்த்ரத்தையே திருநாம மாக்கினார் ஜகத் குருவான வஸிஷ்டர். திருநாமமே ஸம்ஸார தாரணம் செய்யவல்லது. ‘𑌲𑍋𑌕𑌾𑌭𑌿𑌰𑌾𑌮𑌂 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌮𑍍’ என்னும் வசநத்தை ஸூசிக்கிறார். ‘ 𑌅𑌭𑌿𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌚𑌰𑌿𑌤𑌮𑍍 ’ என்று பாலகாண்டம் மூன்றும் ஸர்க்கத்தில் மஹர்ஷி ஸம்க்ஷேபத்தில் கூறிய சரித்ரத் திருநாமம். ‘ 𑌅𑌨𑍇𑌨 𑌕𑌿𑌮𑍁 𑌕𑍋𑌸𑌲𑌸𑍁𑌤𑌾𑌕𑌰𑍍𑌣𑌾𑌸𑍍𑌵 ’ என்று

'கில' ஶப்தத்தோடு 'கோஸலோ நாம' என்ற இதிஹாஸத் தொடக்கத்தை முதலில் அநுஸரித்தார். இங்கே முடிவில் இது 'அபிராமனான ஸ்ரீ ராமனுடைய சரித்ரம்' என்கிறார்.

விஶ்வம் தத் ஸநாதீக்ருதம்—'த்ரைலோக்யமபி .... நாதவத்தரம்' என்று அயோத்யா காண்டாரம்பத்தில் தஶரத வசநத்தோடு முடிக்கிறார். பாலநம் செய்யும் ஸாமர்த்யத்திற்கு மூன்று லோகமும் போதாது. நாதன் ஶக்தி அதிகமாகவும் ஆளப்படும் லோகம் குறைவாகவுமே யிருக்கிறதென்று ஈடு காட்டிய ரஸத்தை ஸூசிக்கிறார். 'ஸநாதீக்ருதம்' என்பதில் 'ச்வி' என்னும் விகுதிக்கு 'அபூததத்பாவம்' பொருள். இதற்கு முன் எக்காலத்திலும் இப்படிப்பட்ட நாதன் இருந்ததேயில்லை என்றபடி 'நாதவத்' என்பதற்கு 'ஸநாதம்' என்பது பொருள். 'விஶ்வம்' என்பது த்ரைலோக்யம். தஶரதர் வார்த்தையிலுள்ள 'எவனாலே' 'என்கிற மூன்றாம் வேற்றுமையை வைத்தே இந்த சரித்ரத்தில் ஒவ்வொரு பதத்தையும் அமைத்தார். 'யேந ஜாதாநி ஜீவந்தி' ராம சரித்ரத்தைக் கற்றுக்கொண்டே வாழ்நாள் முழுவதும் வாழவேணும். 'அயோத்தியில் வாழும்' என்ற விடத்தில் இந்த உத்தம வாழ்க்கையை ஆழ்வார் நினைந்து கரைந்தார். [தொடரும்.]

ஸ்ரீ:

நற்போது போக்கு

1. திருவேங்கடமுடையான் லீலை.

" நீமேவு திருமலையில் அஞ்சாயல் மயிலாடு
நிலைகுருடர் காண வறுகால்
நிறையிம் மெனப்பாடு மிசைசெவிடர் வினவவந்
நீர்மைகண் டூமை புகழ
மாமேவு கைப்பொருள் பறித்தோடு நெடியவான்
மந்திபின் பங்கோ டவே
மண்ணுலகில் நீலீலை பண்ணுவாய் சாமியுன்
மாயையார் அறிய வல்லார்"

திருவேங்கடமுடையான் பஞ்சரத்நம்.

ஸ்ரீநிவாஸன் எழுந்தருளியுள்ள திருமலை, அஞ்ஜநாத்ரி வேங்கடாத்ரி ஶேஷாத்ரி எனப் பெயர் பெறும். அத்திருமலையில் அழகிய சாயலையுடைய மயில்கள் ஆடுமாம். அவ்வாட்டத்தை அங்குள்ள பிறவிக் குருடர் காண்பார்களாம். அறு கால சிறு வண்டுகள் பாடுமாம். அவ்வின்னிசையைச் செவிடர் கேட்டு ரஸிப்பார்களாம். அவ்விசை யின்பத்தில் ஈடுபட்டு ஊமைகள் அதன்

சிறப்பைப் பலவாறு புகழ்ந்து பேசுவார்களாம். இவர்கள், தங்கள் கையில் வைத்துக்கொண்டுள்ள பண்டங்களை, அம்மலையில் வதியும் மந்திகள் (குரங்குகள்) பறித்துக்கொண்டு ஓடுமாம். அவற்றை மீண்டும் திருப்பிக் கொணரும் பொருட்டு முடவர் அம்மந்திகளைத் துரத்திக்கொண்டு ஓடுவார்களாம். என்னே உன் ஆச்சர்ய லீலை! என்னே உன் மாயை!

“ யஸ்ய வூஷாதகுயா பயிரः ஶுரணொதி
வஷூ॰ः வூயாவதிஜவெந அ வக்ஷூமகः।
சுஙः வூவஶுதிஷ॰தம் ஶுஹதெ அ வஙூா
தடெவஜெவவாஉ॰ ஶரணம் ஶதொஷி॥”

என்னும் ச்லோகத்தை ஒருசார் அடியொற்றியது இச்செய்யுள்.

* * * *

2. யானை மேல் ஏறிக்கொள்ள வேண்டல்

“ நீதந்த பிரபஞ்ச வனமதனுள் நெறியலா
நெறிசென்று வளர்பா வமாம்
நிகழ்தாவ வனல்சுடச் சித்தச கிராதசர
நிரைவந்து தைத்துரு வியே
நோதந் தலைக்கவும் வேரியங் குழல்மகளிர்
நோக்கெனும் படுகுழி விழ
நொந்தங் ஙனேகிடக் கின்றதென் மனயானை
நோய்துடைத் தேறிக் கொளாய்”

திருவேங்கடமுடையான் பஞ்சரத்நம்.

அலர்மேல்மங்கை நாதனே! நீ படைத்த ப்ரபஞ்சம் என்பது ஒரு வனம். அவ்வனத்துள் (என்) மன மென்னும் மத்த கஜம் வழியல்லா வழியில் [பாவ வழியில்] அலைந்தோடுகிறது. அவ்விடத்தில் பாவமாகிய காட்டுத் தீ [தாவாக்னி] சுட்டெரிக்கிறது. அந்த ப்ரபஞ்ச மென்னும் காட்டில் ம்ருக வேட்டைக்கு வந்திருக்கும் சித்தஜன் (மந்மதன்) என்னும் கிராதன் (வேடன்) தன் அம்புக் கூட்டங்களை [மலரம்புகளை] மாரிபோல் பொழிந்து (காம) நோயை உண்டாக்கி அவ்யானையைப் படுகுழியில் தள்ளித் தன்வசமாக்க முயல்கிறான். அவனுடைய முயற்சிக் கிசைந்து, செவ்வி மாறாத அன்றலர்ந்த மலர்களைச் சூடிய கூந்தலையுடை மகளிரின் கடைக்கண் நோக்கெனும் படுகுழியில் (என் மனம் மென்னும்) யானை விழுந்து செய்வதறியாது தத்தளிக்கிறது. இப்படி எவ்வளவு காலம் வேதனையோ அறியேன். ஆதலின் நீ விரைவில் வந்து (அக்காம) நோயைத் தீர்த்து அதன்மேல் ஏறி நடத்தவேணும். இதுவே அடியேனுடைய ப்ரார்த்தனை. [ஒப்புயர்வற்ற கருத்துக்கள் அடங்கிய இச்செய்யுட்கள் படித்துச் சுவைத்தற் குரியன.]

கொ. ஸுதர்சநாசார்யர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

தத்வ ஹித புருஷார்த்தங்கள்

[தார்மிக ரத்னப்ரதீப ஸ்ரீ. உப. N. R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், B.A., B.L.,
அட்வோகேட், மதுரை.]

வைதிக மதம் தத்வ ஹித புருஷார்த்தங்களை விமர்சிக்கிறது. திருவோடு திகழ்ந்தருளும் திருமாலே தத்வம். அவனைச் சரணடைதலே ஹிதம். அவன் அருளுக் கிலக்காகிப் பிறவிப் பிணி யறுத்து வீடு பெறுதலே பெரும் பயனாகிய புருஷார்த்தம். தர்மார்த்த காம மோக்ஷங்களைப் புருஷார்த்தங்கள் என்னும்பொழுது மோக்ஷமே பரம புருஷார்த்த மென்றும், மற்றைய மூன்றும் அம்மோக்ஷத்திற்கு இன்றி யமையாத ஸாதநங்க ளாதலின் அவைகளையும் ஒரு படியில் ஏற்றி அத்துடன் வைக்கப்பட்டன. இது வைதிக மதத்திற்கு விருத்த மாகாது. 'ராமோ விக்ரஹவாந் தர்ம:' என்றும், இன்னும் பிறவாற்றானும் போற்றப் பெறும் திருமாலே தர்ம மெனத் தட்டில்லை. எல்லாத் தர்மங்களையும் தன் ஆஜ்ஞா ரூபமான வேத ஶாஸ்த்ரங்க ளாகிய சப்த ப்ரமாணத்தால் விரித்து, பின் இவைகளின் அநுஷ்டாநத்தில் ஸந்தேஹ விபரீதங்கள் உண்டாகாமல் இருக்கத் தானே ராமக்ருஷ்ணாத் யவதாரங்களில் ஸகல தர்மங்களையும் அநுஷ்டித்தும் விவரித்தும் காட்டி யுள்ளான் சரண்யன். இதைக் கம்பர்,

> " நின்செய்கை கண்டு நினைந்தனவோ நீண்மறைகள்
> உன்செய்கை யன்னவைதான் சொன்ன வொழுக்கினவோ
> என்செய்தேன் முன்னம் அறம்செய்கை யெய்தினர்
> பின்செல்வ தில்லாப் பெருஞ் செல்வ நீதந்தாய் "

என்கிறார். இதில், தர்மங்களின் உண்மையான அநுஷ்டாநங்கள் ராமனிடத்தில் விளங்குகின்றன வென்பது கவியின் முக்ய நோக்கு. முற்காலத்தில் இவனுக்குப் பெரியோராய் விளங்கியவர்களும் இதே ஒழுக்கத்தில் நின்றுள்ளார்க ளாதலின், அவர்கள் ஒழுக்கத்தை ஸதாசார மாக்கி, அதனையே எடுத்துக் காட்டாக விளக்கி, அவர்கள் சரித்ரங்க ளடங்கிய இதிஹாஸ புராணங்களை ப்ரமாண நூல்களாக்கித் தருதலே எனினும் அமையும். இதனால் திருமாலே தத்வமும் தருமமும் ஆதல் பெற்றாம். இனி, ஹிதம் என்பது உபாயம் என்னவும் பெறும். இது அர்த்த காமங்களின் பாற்படும். (அர்த்தம்= பொருள் ; காமம்=விருப்பம்) காமத்தின் கைகூடுதலுக்கு அர்த்தம் உதவியாக உள்ளது. ஒருபுறம் தர்மமும் மற்றொரு புறம் காமமும் தன்னைத் தாங்கிச் செல்லும் செலவே பொருளின் உறுதிப்பாடுடைய செலவு என்பதைத் தெளிவிக்கிறது. இதையே, 'தர்மாவிருத்தோ பூதேஷு காமோஸ்மி பரதர்ஷப' என்றான் கீதாசார்யன். காமங்க ளெல்லாம் தர்மத்துக்கு விரோதிக்காதவைகளாக (அதாவது: உடன்பாடுள்ளவைகளாக) இருத்தல் வேண்டும். அந்தக் காமங்க ளெல்லாம் நான்தான் (என் விபூதிதான்) என்பதை விளக்குகிறான்

கிதாசார்யன். தர்மத்துக்கும் காமத்துக்கும் உள்ள ஸம்பந்தத்தையும் அதனால் பெறத்தக்க பெரும் பேறுகளையும்

‘தங்குமா பொருளும் தருமமும் துணையாத் தம்பகைப் புலன்களைத் தவிர்க்கும்
பொங்குமா தவமும் ஞானமும் புணர்ந்தோர்........’

என்பதால் கம்பர் விளக்குகிறார். ஒருவர் தம்மிடமுள்ள பெரும் பொருளைத் தருமம் என்னும் கருவியாலே செலவிட வேண்டும். அது பெருந் தவமாகும். அதனால் புலன்கள் தமக்குப் பகையாக உள்ள வழிகளைத் தவிர்த்து இவ்வுலகில் நல் வாழ்க்கையையும் பிறகு மோக்ஷ வின்பமும் அடையும் நெறியில் இவனை உய்ப்பனவாம் என்னும் பொருளை இப்பாசுரத்தால் தெளிவிக்கிறார். இதனால் பரோக்ஷ ஜ்ஞானமே உண்டாகு மென்கிறார். இதன் கருத்தைப் புகழேந்தியும் ஒருவாறு ‘ஐம்புலனும் நல்லமைச்சா’ என்று குறிப்பிட்டு, ஸதாசாரத்தினால் நல்லனவே செய்து அல்லன வெறுத்துப் பழகிய நம் பொறி புலன்கள் ஒரோ வழி நமக்கு மதிகெட்டுத் தீயன செய்ய மனம் துணிந்தாலும், புலன்கள் மனத்துக்கு நல்ல மந்த்ரிகளாய் அமைந்து மதியையும் திருத்தி அத்தீய ஒழுக்கத்தை விட்டகலச் செய்வன என்று விளக்குகிறார். நமக்குத் தீங்கிழைத்தவரை நோக்கி ‘உன்னை வைய என் நா எழவில்லை’ என்றும், விஷமம் செய்து நஷ்டம் விளைவித்த குழந்தையை நோக்கி ‘உன்னை யடிக்கக் கை வரவில்லை’ என்றும், ஒழுக்கத்தால் மிக்க பெரியார் சொல்லக் கேட்டிருக்கிறோம். இவர்கள் தர்மமே துணையான ஒழுக்க முடையவ ராதலின், இவர்கள் நாவும் கையுமாகிய புலன்கள் மற்றொருவரை வைதல் குழந்தையை அடித்தல் என்னும் தமக்கே பகைச் செயல்களாகித் தம் ஸ்வரூபத்தைக் கீழ்ப்படுத்தும் செயல்களினின்று தவிர்ந்தன வென்பதும், இப்புலன்களின் பழக்கப் பெருமையால் இவர் மனத்துக்கும் அவை நல்லமைச்சாகி இந்த ஸங்கல்பங்களிலிருந்து மனத்தைத் திருப்பி மாற்றின வென்பதும் வெளியாகின்றன. நல்லமைச்சு தலைவனாகிய சேதனனுக்கு ஸந்தேஹம் வந்தவிடத்து உறுதிப் பொருளை வற்புறுத்தி நல்வழிப் படுத்துவது. இதை,

“ தம்முயிர்க் குறுதி யெண்ணார் தலைமகன் வெகுண்டபோதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின் றுரைக்கும் வீரர்
செம்மையிற் றிறம்பல் செல்லாத் தேற்றத்தர் ”

என்று கம்பர் தெளிவுறுத்துகிறார். இந்தப் பெருமை, தரும வழியில் பொருளைச் செலவிட்டொழுகுதலால் புலனுக்கும் ஸித்திக்கு மென்பது கம்பருடையவும் புகழேந்தி யுடையவும் தேர்ந்த முடிவாகும். ஆதலின், பொருளும் இன்பமும், இராமன் ஒழுக்கத்தையும் கண்ணன் ஆஜ்ஞையையும் பற்றி நிற்றலே தகுதி யென்பது பெற்றோம்.

இனி ஆழ்வார்கள் படியில் ஆழங்கால் பட்ட எம்பெருமானாரும், திருவிருத்தம் திருவாய்மொழி பெரிய திருமொழி நாச்சியார் திருமொழி திருப்பாவைகளில், ஆணாய்ப் பிறந்தும் வளர்ந்தும் அறிந்தும் பாடும் தசை

யில் உணர்வு தன்னைப் பெண்ணாக்கி ஆட்படுத்தின நம்மாழ்வாரும் திருமங்கை மன்னனும், பெண்ணாய்ப் பிறந்த ஆண்டாள் 'மானிடவர்க் கென்று பேச்சுப் படில் வாழகில்லேன்' என்று களவியலின் கடைசித் துறையாகிய 'அலரறிவுறுத்தல்' துறையில் தன் உறுதிப்பாட்டை வெளியிடுதலையும் நோக்கிக் காமமே பரம புருஷார்த்த மென்றும் அது கண்ணன்பால் ஆக வேண்டு மென்றும் தர்மார்த்த மோக்ஷங்களாகிய பிற மூன்றும் அதற்கு அங்கங்களே யென்றும் அறுதியிட்டார்கள். இராமாநுச நூற்றந்தாதி 40-வது பாசுரத்தில் இது,

"சேமநல் வீடும் பொருளும் தருமமும் சீரியநற்
காமமு மென்றிவை நான்கென்பர் நான்கினும் கண்ணனுக்கே
ஆமதுகாமம் அறம்பொருள் வீடிதற்கென் றுரைத்தான்
வாமனன் சீல னிராமாநுச னிந்த மண்மிசையே."

என்று பேசப் பெறுகிறது. மேலும், 'இற்றைப் பறைகொள்வா னன்று காண் கோவிந்தா, எற்றைக்கு மேழேழ் பிறவிக்கு முன்தன்னோ, டுற்றோமே யாவோ முனக்கேநா மாட்செய்வோம், மற்றைநங் காமங்கள் மாற்று' என்பதால், அநவரதம் கண்ணன் த்யானமும் அவன் வழித் தொண்டும் புலனாவதுடன், பல பிறவிகளிலும் இவை தலைக்கட்ட அந்திம ஸ்ம்ருதியும் இதுவே யாகவேணும் என்பதும், உடல்வழிச் செல்லும் காமம் நெறிமாறி உயிர் வழிக் கண்ணன் பக்கல் செல்லவேண்டு மென்றும், செலுத்துவதும் அவனே செய்யவேண்டிய தென்றும் தெளிவாகின்றன. கண்ணன்பாற் கொண்ட காமம் இங்கு இப் பெரும்பயனை விளைவிக்குமாயின், 'அங்குப் போய் இதனினும் பெரியது யாதொன்றை யாம் செய்ய வல்லோம்' என்னும் தெளிவால் அங்கு மிது நிலைத்தால் போதும் என்னும் ஆசையால் வீட்டையும் கண்ணன் பால் கொள்ளும் காமத்திற்கு உறுப்பாக்கி உணர்வதும் உரையாடுவதும் ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்தத்தின் ஏற்றம். இது பழந்தமிழர் மதம் என்பது திருக்குறளால் விளங்கும். துறவற வியலின் மிகச் சாரமான துறவு யென்னும் அதிகாரத்தில்

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனி னதனி னிலன்."

[எதெதை விட்டு ஒருவன் ஒழிவடைந்து நீங்குகிறானோ அததிலிருந்து அவனுக்கு வருந்துதல் இல்லை] என்று உண்மைத் துறவைத் தொடங்கிய நாயனார்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்று முடிக்கிறார். துறவு நிலைக்க வேண்டுமானால் பற்று நிலைக்கவேண்டு மென்கிறார். ஆனால் இந்தப் பற்று பற்றற்றான் பக்கல் கொள்ளும் பற்று என்று குறிப்பிடுகிறார். இதையே ஆழ்வார்களும் ஆண்டாளும் எம்பெருமானாரும் விளக்குகின்றனர் என்பதும் பொருந்தும். இதுவே கம்ப நாட்டாழ் வாரும்

18925

"கோதமன்றன் பன்னிக்கு முன்னையுருக் கொடுத்ததிவன்
போதுநின்ற தெனப் பொலிந்த பொலன்கழற்கால் பொடிகண்டாய்
காதலென்றன் உயிர்மேலு மிக்கரியோன் பாலுண்டால்
ஈதிவன்றன் வரலாறும் புயவலியு மெனவுரைத்தான்"

என்கிறார். ஸம்ப்ரதாயத்தின் மஸ்தகமணி என்னலாம்படி அமைந்துள்ளது இப்பாசுரம். ஆதித்தன் தொடங்கி விவரித்த இந்தக் குலத்தில், திருவடி ப்ரபாவத்தைக் கண்டும் கேட்டும் நினைத்தும், சேதநர்கள் உஜ்ஜீவிக்க வென்றே இவன் அவதரித்துள்ளான் என்று இவன் பரத்வத்தில் தொடங்குகிறது இப் பாசுரம். இந்தப் பரத்வத்துக்கு நம்மாழ்வாரை ஸாக்ஷி கொடுக்கிறான் கவி. ஆழ்வார் நாராயணனை நேரில் ஸேவித்து, 'அடிச்சோதி நீநின்ற தாமரையாயலர்ந்ததுவோ!' என்று அருளிச் செய்தார். இதை ஶதாநந்தருக்கு நினைவூட்டி, 'இவன் பொலன் கழற்கால் போது நின்றதெனப் பொலிகின்றது; ஊன்றிப் பாரும்' என்று ஸேவை பண்ணிவைத்து, 'இவன்தான் நம்மாழ்வார் யோக ஸமாதியில் கண்டு களித்த நாராயணன்' என்கிறார். அதற்கு அடுத்தபடி, தன்னையே ஸாக்ஷி கொடுக்கிறான் ரிஷி. 'நான்கு திக்குக்களிலும் தவம் செய்து, மேநகை மையலிற் பட்டு மீண்ட நான் துறவின் பரம எல்லையைக் கண்டு, அதில் நின்று வஸிஷ்டர் வாயால் ப்ரஹ்ம ரிஷி என்று மேன்மை யுற்றேன். தவம் தானே யுதவும் என்னும் மயக்கத்தால், இவனிடம் பற்று வருதற்கு முன் உலகப் பற்றுக்களை யறுக்கவேண்டு மென்று பெருந் தவம் முயன்றேன். பயன் காணேன். என் உயிர்க்கு உறுதி பயக்க வல்லது இவனிடம் வைக்கும் பற்றுத்தான் என்று தீர்மானித்து, என் உயிரினும் மேலான காதலை இவனிடம் வைத்துள்ளேன்' என்கிறான். ப்ரஹ்ம ரிஷி யாரைக் காதலிப்பன்? ப்ரஹ்மத்தை யல்லவா? அது இவன் தான் என்று குறிப்பிடுகிறான். 'இவன் தன் பிதாவின் கட்டளையால் என்னைத் தொடர்கிறான்; நான் என் ஆத்மாவின் உஜ்ஜீவநத்துக்காக இவனைப் பற்றி நிற்கிறேன்' என்று கவி விச்வாமித்ரனைப் பேசச் செய்கிறான். இதனாலும், கண்ணனிடம் கொள்ளும் காதலே நமக்குப் பரம ச்ரேயஸ்கரம் என்பது போதரும்.

மோக்ஷம் என்னும் சொல்லுக்கு விடுபடுதல் என்பது பொருள். உடற் குணங்கள் உலக வழியில் இழுத்து உயிர்க் குணங்களை அழிப்பன. ஆதலின் ஆத்மாவை இவைகளினின்று விடுவித்து உயிர்க் குணங்களிலே எல்லா முயற்சியும் மேம்பாடும் உண்டாகி, அவைகளுக்கு அடைவிடமான பரமாத்மாவிடத்தில் பற்று முற்றி உலகப் பற்றெல்லாம் ஒழித்து நிற்றலே வீடு. இதை ஸ்ரீ சடகோபன்,

"வீடுமின் முற்றவும் வீடுசெய் தும்முயிர்
வீடுடை யானிடை வீடு செய்ம்மினே"

என்று குறிப்பிடுகிறார். ஆழ்வார் எம்பெருமானர் முதலிய நம் ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகர்கள் எல்லாரும், விச்வாமித்ரன் கடைசிக் காலத்தில் பெற்ற பாக்ய மாகிய பரம புருஷனிடம் கொள்ளும் காதலையே பகவானிடத்தில் வைத்

தார்கள். விபவத்தைக் காட்டிலும் பன் மடங்கு ஸௌலப்யாதி உயர் குணங்கள் அர்ச்சையில் ப்ரகாசிக்கின்றன வாதலால், அவர்கள் அவ்வர்ச்சையில் அந்தக் காதலைச் செலுத்தி உலகப் பற்றினின்றும் விடுபட்டு விளங்கினார்கள். ஆகவே: திருவுடன் விளங்கும் திருமால் தத்வமும் தர்மமு மாகிறான். அர்த்த காமங்கள் தர்மத்தின் பக்கல் தமக்குள்ள சார்பால் ஹிதமும் உபாயமும் ஆகின்றன. எம்பெருமான் பக்கல் மேம்படும் காமமே பரம புருஷார்த்தமாகி மோக்ஷ மென்று ப்ரஸித்தி பெற்ற நாலாவது புருஷார்த்தமும் தனக்கு அங்கமாகத் தக்க பெருமையுடைத் தென்பது தெளிவாகிறது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீ நரஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

திருப்பாவை

[ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்ய ஸ்வாமி, B.A., B.L., அட்வோகேட், திருப்பாப்புலியூர்.]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

இது கேட்டபிறகு பெருமாளுடைய கடாக்ஷம் சிறிது வெளியே ப்ரஸரித்தவுடன் ஆண்டாளுக்கு உத்ஸாஹமும் வால்லப்யமும் வ்ருத்தியடைந்து, 'உத்திஷ்ட நரஶார்தூல கர்தவ்யம் தைவமாஹ்நிகம்' என்று விச்வாமித்ர மஹர்ஷி கட்டளையிட்ட க்ரமத்திலே சிங்கம்போல் எழுந்து சிங்காசனத்தின்மேலேறிக் கர்த்தவ்யத்தைக் கவனிக்கவேணு மென்று விஜ்ஞாபிக்கிறார்கள்.

23. மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்க மறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க வெப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலேநீ பூவைப்பூ வண்ணாவுன்
கோயில்நின் றிங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரிய சிங்கா சனத்திருந்து யாம்வந்த
காரிய மாராய்ந் தருளேலோ ரெம்பாவாய்.

[பதவுரை] [வஸுதா ச்ரோத்ரஜர் 'நரஶார்தூல' என்று பாவ கர்ப்பமாய் விச்வாமித்ர வாக்கினால் ஸம்போதித்ததை வஸுதைப் பிராட்டியார் தாமே கோதா ரூபியாய் இப்பாசுரத்தில் விவரணம் செய்திருப்பது ஆதிகவிக்கு அதிமாத்ராநந்தத்தைத் தரு மென்பதற்கு ஆக்ஷேப மில்லை. இங்குள்ள ஸ்வபாவோக்தி அந்யாத்ருஶமானது. ஸிம்ஹம் விழித்தெழுவதை ப்ரத்யக்ஷமாகக் காட்டுவதுபோல் இருக்கிறது இப்பாசுரம். உயர்ந்த சித்ரத்தில்கூட இவ்வளவு அமைவது துர்லபம். 'யதாவிஜ்ரும்பிதே ஸிம்ஹோவிவ்ருதாஸ்யோகிரிகஹ்வரே'

என்று ஆதி கவி ஸூசித்திருப்பது இங்கு யதாவத்தாய் ப்ரபஞ்சிக்கப்பட்டிருக்கிறதுபோலும்] மாரி—வர்ஷாகாலத்தில், மலை முழைஞ்சில்-பர்வதத்தின் உள் பாகத்தில் இருக்கும் குஹையில், மன்னி கிடந்து உறங்கும்-வெளிவராமல் ஸ்திரமாய்ப் படுத்துத் தூங்குகிற, சீரிய சிங்கம்-ச்ரேஷ்டமான (ஸர்வ லக்ஷண ஸம்பந்நமான) ம்ருகேந்த்ரன், அறிவு உற்று-தூக்கம் கலைந்து, தீ விழித்து-நெருப்புத்தணல் போன்ற தன் கண்களை விழித்துப் பார்த்து, [ஸ்ரீந்ருஸிம்ஹாவதாரத்தில் பகவானை 'வரதவ்ரு ஆஶீகஷ அஷூழொ அநம்' என்று சுக ப்ரம்ஹம் வர்ணித்திருப்பது இங்கு அநுஸந்தேயம்.] வேரி மயிர்—பரிமளம் பொருந்திய ரோமங்கள், பொங்க-சிலிர்க்க, எ பாடும் பேர்ந்து உதறி-எல்லா அவயவங்களையும் அசைத்து உதறி, மூரி நிமிர்ந்து-சோம்பல் முறித்துத் தலை தூக்கி, முழங்கி-கம்பீரமாய்க் கர்ஜித்து, புறப்பட்டு போதருமாபோலே-வெளியே கிளம்பிப் போவதுபோல், பூவை பூ வண்ணா-காயாம்பூவைப்போன்ற நீல வர்ணமுடையவனே! நீ உன் கோயில் நின்று-நீ உனது திருப்பள்ளியறையிலிருந்து, இங்ஙனே-இவ்வழியாகவே (நாங்கள் இருக்கும் வாசற்படி வாயிலாகவே), போந்தருளி-எழுந்தருளி, கோப்பு உடைய-திவ்ய ஸம்ஸ்தானத்தையுடைய (ஸர்வ சுப லக்ஷணங்களுடன் அமைக்கப்பட்ட), சீரிய-மேன்மை வாய்ந்த [உயர்ந்த ரத்நங்கள் சிறந்த தங்கம் முதலிய ஸர்வோத்தமமான ஸர்வ ஸாமக்ரிகளைக் கொண்டு அழகான சித்ரவேலைகள் முதலியன செய்யப்பட்டுள்ள] சிங்காஸனத்து இருந்து-ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருந்து, யாம் வந்த காரியம் ஆராய்ந்தருள்-எங்கள் உத்தேசத்தைக் கேட்டு, அதன் ஔசித்யத்தைப் பராமர்சித்து க்ருபையுடன் பல ப்ரதானம் பண்ணவேண்டும்; எங்களுடைய மநோரதத்தைப் பூர்த்தி பண்ணவேண்டும். 'நமஸொவ நஸொவாக்ஷஹொஶாஜாஜதெநஶஶ' என்றபடி எங்களுக்கு நீயே நிருபாதிக ஸ்வாமியான படியால் எங்களுடைய நிருபாதிக தாஸ்யத்தை நன்குணர்ந்து தத்நுகுணமான கைங்கர்யங்களைச் செய்வதற்கென்றே த்ரிகரண பரிசுத்தியுடன் நாங்கள் உன்னிடம் வந்திருக்கிறோமாகையால், எங்களுக்குக் கோபநீயம் ஒன்றுமில்லை யென்கிற நிஷ்கர்ஷம் இருப்பது பற்றி, நீ உன் ந்யாயஸ்தானத்திற் சென்று தர்மாஸனத்தை அதிகரித்து எங்களுக்கு ஸ்வரூபோசிதமான புருஷார்த்தத்தை க்ருபை பண்ண வேணும் என்பதுதான் எங்கள் ப்ரார்த்தனை. சக்ரவர்த்தித் திருமகன் பட்டாபிஷேகம் செய்துகொள்வதற்குமுன் நந்தி க்ராமத்தில் பரதன் பகவானை ராஜ்யத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று ப்ரார்த்தித்தபோது, பகவான் சிறிது காலம் பேசாமலிருந்த தன்மேல், பரதன் 'யதாஹ்யாரொவிதொவரக்ஷ:' இத்யாதியாக ஈஷத் உபாலம்ப கர்ப்பமாய் சுட்டிக் காட்டிய பிறகு பெருமாள் இசைய எண்ணங்கொண்ட ஜாடை தெரிவித்தவுடன் பரதாழ்வான்,

'ஜகதத்ராபிஷிக்தம் க்ஷா உநவஶ்ரித ஸவகுரு: ।
ப்ரதவஞ்ஜிவாதித்யம் ஊர்யாஹ்நே தீவ்ர தேஜஸம் ॥

என்று முதலாக மேல் ஆக வேண்டியதைக் குறித்துப் ப்ரார்த்தித்த க்ரமம் இங்கும் அநுஸரிக்கப் பட்டதாகும். மேலும், திருவாய்ப் பாடியில் கோபிகை

கள் வைஷயிகமான பாஹ்ய ஸம்ச்லேஷத்தைப் பெரிதாக நினைத்ததற்காகப் பிறர் அறியாது ரஹஸ்யமாய்த் தங்களுக்குள் ஸங்கேதித்துக் கொண்டதுபோல் அல்ல எங்களுடைய அபிஸந்தி. மேலும், ஸர்வ ப்ரகாரத்திலும் உனது பரத்வத்தையும் ஸ்வாம்யத்தையும் செவ்வனே அறிந்து அசஞ்சலமான ஏகாந்த பக்தியுடன் லோகமறிய உனது பராக்ரமத்தினால் அடக்கப்பட்டுக் கர்வ பங்கமடைந்து ஶரணாகதனாய் வந்து விழுந்த அஸுரர் தேவர் முதலியோரைப் போல் அநந்ய ஶரணர்களாக அவர்களுடன் ஸமமான ப்ராவண்யம் உடையவர்களாய் உனது திருவடித் தாமரைகளை ஆச்ரயித்து, எங்களுக்கு ஸமுசிதமான குற்றேவல்களைச் செய்வதற்காகவே நாங்கள் வந்திருக்கிறோம். ஆகையால் உனது திவ்யாஸ்தாநத்தில் ராஜ்ய நிர்வாஹம் செய்யும் ஸந்தர்ப்பத்தில் மேற கூறிய அஸுரர் தேவர் முதலியவர்களுடையவும், மற்ற ப்ரஜைகளுடையவும் குற்றங் குறைகளை விசாரித்து ந்யாயம் செலுத்துவது போல், யாதொரு திரைச்சாட்டு மில்லாமல் பஹிரங்கமாக எங்களுடைய விண்ணப்பத்தையும் கேட்டு விசாரித்து ந்யாயம் செலுத்த வேண்டுமென்று தாத்பர்யம்.]

இவ்வாறு விசுத்தமான ப்ரார்த்தனையைக் கேட்டவுடன் பகவான் 'தயெதிவுதிஜஹ்ாஹ நிஷஸாஷாஸநெ ஶுஹெ' என்ற கணக்கில் அப்ரார்த்தனைக்கு இணங்கித் திருப்பள்ளியை விட்டு திவ்யாஸ்தாநத்துக்கு எழுந்தருள யத்தநித்த மாத்ரத்தில், ப்ரார்த்தயிதாக்களான சிறுமிகளும் ஆண்டாளை முன்னிட்டுக்கொண்டு பெருமாளுடைய நடையழகைக் கண்டு அதிமாத்ர ஹர்ஷ விஸ்மயாதி பரவஶராய், அநுமதியை எதிர்பாராமலே அவரது வந்தி கோஷ்டியில் அமர்ந்து வாசிக கைங்கர்யம் செய்யத் தொடங்குகிறார்கள்.

24. அன்றிவ் வுலக மளந்தா யடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல்போற்றி
பொன்றச் சகட முதைத்தாய் புகழ்போற்றி
கன்று குணிலா வெறிந்தாய் கழல்போற்றி
குன்று குடையா வெடுத்தாய் குணம்போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
என்றென்றுன் சேவகமே யேத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோ மிரங்கேலோ ரெம்பாவாய்.

[பதவுரை] அன்று — முற்காலத்தில் (த்ரிவிக்ரமாவதாரத்தில்,) இவ்வுலகம் அளந்தாய்—இப்ராக்ருத மண்டலத்தை முற்றும் அளந்தவனே! அடி போற்றி—அப்படி அளந்த உனது திருவடிகள் எங்களை ரக்ஷிக்கட்டும்; அங்கு சென்று—அவ்விடத்துக்கு நடந்து சென்று, தென் இலங்கை செற்றாய்—தெற்குத் திக்கிலுள்ள லங்கையை த்வம்ஸம் செய்தவனே! [வெகுதூரம் நடக்க வேண்டியிருந்ததைக் குறிக்கத் 'தென்னிலங்கை' எனப்பட்டது.] திறல் போற்றி—உன் ஶக்தி எங்களை ரக்ஷிக்கட்டும். [மற்றுள்ள தேவர்களால் முடியாத கார்யத்தைச் செய்து முடித்தால் நீயே ஶக்திமான் என்பது கருத்து.]

சகடம்—வண்டி உருவம் கொண்டுவந்த ஶகடாஸுரன், பொன்ற—நசிக்கும் படி, உதைத்தாய்—(உன் சிறு திருவடியால்) உதைத்து வீழ்த்தினவனே! புகழ் போற்றி—உன் கீர்த்தி எங்களை ரக்ஷிக்கட்டும். [சகடாஸுரனை உதைத்ததை ஒருவரும் நேரில் காணாததால் அநுமானத்தைக் கொண்டு ஊஹித்து அந்த ப்ர ஸித்தி எங்கும் பரவினதுபற்றி இங்கு ‘புகழ் போற்றி’ என்று கூறப்பட்டது.] கன்று—கன்றுக்குட்டி ரூபமாய் வந்த வத்ஸாஸுரனை, குணிலா—கவணைக் கொண்டு, எறிந்தாய்—விளாமரத்தைக் குறித்து வீசி எறிந்தவனே! கழல் போற்றி—உன் திருக்கால்கள் எங்களை ரக்ஷிக்கட்டும். [எறியும்போது கால்களைப் பூமியில் த்ருடமாய் ஊன்றிக்கொண்டபோது அவைகளின் பலத்தையும், அப்படிப் பெருமாள் நின்ற ப்ரத்யாலீட ஸ்திதியின் அழகையும் உத்தேஶித்துத் திருக் கால்களுக்கு மங்களாஶாஸநம் செய்கிறார்.] குன்று—கோவர்த்தந கிரியை, குடையா—குடையாக, எடுத்தாய்–தூக்கியவனே! குணம் போற்றி– உனது ஆச்ரித ரக்ஷண நிஷ்டையாகிற மஹா குணம் எங்களை ரக்ஷிக்கட்டும். [கோகுலம் முழுவதும் இந்த்ர கோபத்தால் உண்டான மஹாவ்ருஷ்டியால் வருந்துவதைக் கண்டு அதிமாத்ர க்ருபாவிஶிஷ்டராய்ப் பகவான் கோவர்த்தந பர்வதத்தைத் தூக்கிக் குடையாகப் பிடித்துத் தன்னைச் சேர்ந்த ஸர்வ ஜீவராஶி களையும் ரக்ஷித்தான் என்கிற மஹா குணத்துக்கு ஸத்ருஶம் மற்றொன்றுமில்லை என்று தாத்பர்யம். ‘ கூயஜாஉ நு நவாகூயஜாகூ ெஜௌ ரா ஸா ஹண உஅதிெத’ என்றபடி ஸர்வ பூத ஸௌஹார்த்தமே மற்றெல்லாவற்றிலும் விஶிஷ்டமான குண மென்பது கருத்து] பகை—(உனது ஆச்ரிதர்களுக்குத் தீங்கு பாராட்டும்) விரோதிகளை, வென்று கெடுக்கும்—ஜயித்து அபுநருந் மேஷமாய் நஶிப்பிக்கும், நின் கையில் வேல்—உன் திருக்கையில் ஏந்திய திவ் யாயுதமானது (ஸ்ரீ ஸுதர்ஶநாழ்வான்,) போற்றி—எங்களை ரக்ஷிக்கட்டும்; [முன் வாக்யங்களில் ‘அளந்தாய், செற்றாய், உதைத்தாய், எறிந்தாய், எடுத் தாய்’ என்று அந்தந்த கார்யங்களுக்குப் பகவானையே கர்த்தாவாகக் குறித்து, இங்கு மட்டில் ‘வென்று கெடுக்கும்’ என்று வேலுக்கு விஶேஷணமாகக் கூறியதற்குத் தாத்பர்யம், பகவதம்ஶ பூதரான ஸ்ரீ ஸுதர்ஶநாழ்வான் தானாகவே பகவானது நித்ய ஸங்கல்ப ப்ரயுக்தமாய் அப்போதைக் கப்போது ப்ரத்யேகமாய் அவருடைய நியமநத்தை அபேக்ஷிக்காமல் அம்பரீஷாதிகளை ரக்ஷித்த கணக்கில் பாகவத ப்ரதிபந்திகளை நிரஸநம் பண்ணும் ஸ்வபாவமுடையவ ரென்பதேயாகும்.] என்றென்று—இவ்விதமாக, உன் சேவகமே ஏத்தி—உன் விக்ரமங்களைப் புகழ்ந்தே, பறை கொள்வான் —எங்களுடைய மநோரதம் பூர்த் தியை அடைவதற்காக, [இவ்வித கைங்கர்யமே எங்களுக்குப் புருஷார்த்த மென்றபடி.] இன்றுயாம் வந்தோம்—இன்று நாங்கள் உன்னிடம் வந்திருக் கிறோம்; இரங்கு—எங்கள் மீது க்ருபை பண்ணவேண்டும். ஏல் ஓர் எம் பாவாய்–. [எங்களை உனக்கு நித்ய கைங்கர்யம் பண்ணும்படி அநுமதி செய்ய வேணும்.]

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீ நரஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

மதுராலாபம்

[ஸ்ரீ. உப S. T. ஸ்ரீநிவாஸாசாரியர், M. A., வித்வான், L. T., திருவையாறு.]

பஞ்ச மஹா பாதகங்களிலும் கொடிய பாதகம் எனப்படுவது கர்வமாகும். ஸ்ரீ வைஷ்ணவனுக்கு அறவே ஒழிக்கத்தக்க பெரும் பாவம் இது. இப்பிசாசு நம்மைப் பிடித்துக்கொண்டு, பிடித்திருப்பதே தெரியாமல், தனக்கு அடிமைப்படுத்தி நம்மை அரு நரகில் ஆழ்த்தும். தாழ்மையே ஸ்ரீ வைஷ்ணவனுடைய பூஷணம். தாழ்மையே ஸ்ரீ வைஷ்ணவனுடைய தாரகம். தாழ்மையே ஸ்ரீ வைஷ்ணவனுடைய உயர்வு. கர்வம் பிடித்தவன் உலகத்தையே தாழ்வாக எண்ணுவான். யாரும் தன் அடியின்கீழ் வந்தால் உயர்ந்து நிற்பார் என்று நம்புவான். தன்னைத் தேவாதி தேவர்களிலும் உயர்வாக உன்னுவான். தாழ்மையை விதிக்கும் சாஸ்த்ரங்களை ஏதோ கட்டுப்பாடு என்பான். சில உயர்வுகளைச் சொல்லிக்கொள்ள ஶாஸ்த்ரமே இடங் கொடுக்கிறது என்பான். வேதத்தை வளைத்து உரைப்பான். ஶாஸ்த்ரங்களை ஒடித்துப் பேசுவான். மக்களை மதியான். மஹிதலத்தைத் தன் பாத பீடமாகக் கருதுவான். அஹம் மஹ மஹ மென்று அநவரத ஜபம் செய்வான். உதிக்கின்ற ஸூர்யனும், ஒளிரும் தாரகைகளும், உயர்வானில் மதியும், விசும்பும், கடலும், மலையும், வானகமும், மண்ணகமும் தன் பெருமை யொன்றையே பாடுவதாக நினைத்து மகிழ்வான். 'இன்ன குலத்தில் பிறந்தவ னன்றோ யான்? என்பான்'. 'இன்ன ஶாஸ்த்ரம் வல்லவ னன்றோ யான்?' என்பான். 'இத்துணைப் பணம் படைத்தவனன்றோ யான்? 'என்று சொல்வான். இந்தக் குல மதம் வித்யா மதம், தந மதம் என்ற மும்மதமும் இவனைப் பாழாக்கும். இவற்றில் முதலில் சொன்ன குலமதம் வித்யாமதம் இரண்டும் மிக்க கொடியன; மிகமிகக் கொடியன.

ஒரு ச்லோகம் அர்த்தம் சொல்லத் தெரிந்தாற் போதும்; இந்த உலகத்தையே மதியான். எவ்வளவு நற்குண முள்ள ஸாதுக்களையும் 'இவன் நற்குலத் துதித்தா னல்லன்' என்று எள்குவான். தன்னிடமுள்ள எந்தக் கொடிய பாதகத்தையும் தன் குலம் ஸமாளிக்கும் என்று மார்தட்டுவான். தான் உலகத்தை ஆக்கவும் அழிக்கவும் வல்லவன் என்று சொல்லிக்கொள்ளவும் யோசிக்க மாட்டான். இவன் தலை நிமிர்ந்தபடியே இருக்கும். இவன் வைத்தது சட்டம். ஆட்டை மாடென்றும் மாட்டைக் கழுதை யென்றும் தன் புத்தி சாதுர்யத்தால் மாற்றி உரைக்கப் பின் வாங்கமாட்டான். ஸபையில் இவன் வருவது சுழல் காற் றடிப்பது போல் இருக்கும். மக்கள் எழுவர். விழுவர்; தொழுவர்; பதறுவர்; பாரிப்பர்; பூரிப்பர். 'இறைவனே இவர்' என்பார். 'எம் தவப் பேறு' என்பர். 'எம் குல தாரகம்' என்பார். 'இறைவனைக் கண்டது யார்? இவரே' என்பர். இவனும் தலை நிமிர்ந்து தன் விழி

களைச் சிறிதும், துதிக்கும் உலகின்மேல் செலுத்தாது, ஆத்மா ராமனைப், தன் பெருமையை நினைத்த மனத்தினை உலக மெல்லாம் தன் பாததுளியால் பாவந மாகின்ற மனப்பான்மையுடன் வருவான்.

தெய்வத்தைப்பற்றி இவனுக்கு மிக உதார புத்தி. பாவம்! ஏதோ ஜனங்கள் நம்புகின்றன. நம்பட்டும். உலகில் அதிகமான அதிக்ரமங்கள் நேராமலிருப்தற்கு இந்தத் தெய்வ நம்பிக்கை வேண்டியிருக்கிறது. இல்லா விட்டால் வலியோன் எளியோனை வாட்டிக் கொலை களவு காமம் இவை சூறு வளிபோல் பரவ நேரிடும். ஆகையால் ஓர் அநுகூலமான இன்றி யமையா ததான தத்வம் என்ற முறையில் (Institutional value) மாத்ரம் கட வுளை இவன் அநுமதிப்பான். இல்லாவிட்டால் கடவுளுக்கு என்ன பெருமை! "எங்கேயாவது ஈச்வரன் என்போன்ற குலத்தில் பிறந்துள்ளானா? என் போன்ற ஞான நிதிகளுடன் அவனுக்குப் பழக்கமுண்டா? அல்லது ஈச்வரன் எங்கே யாவது என்னைப் போல் ப்ரவசநம் செய்திருக்கிறானா? ரஸமும் ரஸாநு பவமும் அறிவானா? சப்தத்தின் சக்தியை யறிவானா? வேத வாக்யகளுக்கு ஸமந் வயம் பண்ணும் யோக்யதையுடன் உரை செய்வானா? அழகாக வாக்யார்த் தங்களைத் தர்க்க முறையில் ஸபா ரஞ்ஜகமாகச் செய்ய வல்லவனா? ஏதோ அவ் வளவு தான்" என்று நினைத்து நினைத்துத் தன் ஞானத்தைப் பற்றிப் பெருமிதம் கொண்டு மூர்ச்சிப்பான். இவன் விழ்ந்த படுகுழியை அறிந்து ஆரேனும் எடுத்துக் காட்டினால் சிங்கம்போல் கர்ஜிப்பான். மலைப் பாம்பு போல் சீறுவான். புலிபோல் உறுமுவான். ச்லோகங்களால் பழிப்பான். கத்யங்களால் இகழ்வான். அலங்காரோக்திகளால் சுடுவான். ஶப்த சாஸ்த் ரத்தால் பரிஹஸிப்பான். மீமாம்ஸை முறையால் எதிரியின் தாழ்ந்த குலம், மடமை, முதலியவற்றை ஏசுவான். தர்க்க ரீதியால் தன் எதிரிக்கு மூளையில்லை யென்றும் அவன் தனக்குச் செய்யவந்த உபதேச ஆபாஸமானது உண்மை யில் அஸூயையே என்று பார்ப்பவர்க்கு ஸத்ஹேதுக்களால் எடுத்து விளக்கு வான். 'ப்ரம்ஹம் ஞான ஸ்வரூபம்; ஞானியே ப்ரம்ஹம்; நான் மஹா ஞானி; ஆகையல் நானே ....' என்று கூசாமல் சொல்லுவான்.

உலகில் தெய்வமுண்டு என்று உணரான். துயர முண்டு என்று அறியான். ஏழைகள் உண்டு என்றறியான். வானும் தனக்கே, வையமும் தனக்கே, ஊனும் தனக்கே, உடையெலாந் தனக்கே, மானுந் தனக்கே, மறை களும் தனக்கே என்று இப்பதினன்கு புவநமும் தன்னையே பாடவும் தன்னை யே நாடவும் உள்ளதாக அறிவான். ஊரெல்லாந் தேடி அலைந்து புரப்பா ரற்றுத் திரிந்து பசியினாலும் துயராலும் புலந்த உண்மைப் புலவனைப் பரிஹஸிப்பான். நாள் முழுவதும் பிறர்க்கே உழைத் தேழையான மிடியனைக் கண்டு நகைப் பான். ஏழ்மை காரணமாகப் பிற ரில்லந்தோறும் நுழைந்து அவர் முகம் பார்த்து எங்கும் யாசகனைக் கண்டு ஏங்குவான். 'அறிவே உயர்வு. அறிவே தெய்வ தத்வம். அறியாத மக்களை ஏன் கமலாஸநன் படைக்க வேண்டும்?' என்று பிறரைப் புழுப்போல் ஒதுக்குவான்.

உலகில் சராசரங்களைப் படைத்து அவற்றுள் ஊனில் உயிர்போல் கரந்தெங்கும் பரந்துள்ள அகில பந்துவை இவன் காணமாட்டான். வாய் பேசும். கை ஆடும். மனம் துடிக்கும். மாதவனை மாத்ரம் காணமாட்டான். ஸூர்யன் எழுவதும், சந்த்ரன் நிலவுவதும், தாரகைகள் மிளிர்வதும், நிலம் நிற்பதும், நெடுங் கடல் பரவுவதும், மலைகள் மன்னுவதும், மாருதம் வீசுவதும், மாதவனார் நினைவினால் என்பதை இவன் அறிய முடியாது. 'நான் சிறந்த அறிவாளி. மற்றவரை ஏன் பிரமன் படைத்தான்?' என்ற ஒரே ஜபம் இவனுக்கு. ஒளி இருள், பொய் மெய், பிறப்பு இறப்பு, தோற்றம் வீழ்ச்சி, நன்மை தீமை என்று ஒன்றோடொன்று எதிரிட்ட வண்ணம் தத்வங்களை இரட்டையாக வன்றோ லக்ஷ்மீபதி ஸங்கல்பித்தார். ஜ்ஞாநம், அஜ்ஞாநம் நிலவு மிடத்திலேயே ப்ரஸரிக்கின்றது. இருட்டிலே ஒளி வீசுகிறது. இவனைப் போன்ற மஹா ஜ்ஞாநிகள் ஒரு சிலர் தானே இருக்க முடியும்? பற்பல விதமான விபவங்களையுடைய இவுன் பெருமை பெற வேண்டுமானால் இப்பெருமை யில்லாத சிலரிடைதான் இவன் வாழவேண்டும். எல்லாரும் ஸர்வஜ்ஞான ஒரு மண்டலத்தில் இவனைத் தனியாக எடுத்துக் காட்டும் குண விசேஷம்தான் என்னே! ஆக, தன்னைப் பல சிறப்புக்களால் அலங்கரித்துத் தக்க பரபாகத்தில் (Back ground) வைத்தருளிய தாமோதரனிடம் தாழ்ந்தன்றோ இவன் வாழ வேண்டும்?

[தொடரும்.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹவரவரமுநயே நம:

திருக்கண்டியூர்

[ஸ்ரீ. உப. திருப்பூந்துருத்தி V. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் B. A., மேல் மாம்பலம்]

'இன்று திருக்கண்டியூரில் பெருமாளுக்குத் திருத்தேர் உத்ஸவம்; ஸேவித்துவிட்டு வரலாம் வாரும்' என்று கூப்பிட்டார் நண்பர். 'ஆஹா வருகிறேன்' என்று உடனே புறப்பட்டுவிட்டேன். எங்கள் க்ராமத்துக்கும் திருக்கண்டியூருக்கும் ஒரு மைல் தூரம் உள்ளது. வழி நன்றாக இருக்கும். சாலைக்கு இரண்டு பக்கங்களிலும் தென்னை மரங்களும் வாழைத் தோட்டங்களும் நெல் வயல்களுமாகக் கண்களுக்கு இனிமையாக இருக்கும். அங்கு இரண்டு மூன்று தாமரைத் தடாகங்களும் இருக்கின்றன. அவைகள் எப்போதும் ஏராளமான புஷ்பங்களோடும் மொட்டுகளோடும் மிகவும் அழகாகவே இருக்கும். அங்கு சப்தித்துக்கொண்டிருக்கும் வண்டுகள் 'உண்மையில் இது தேவதைகளின் கானமோ?' என்று நினைக்கும் வண்ணம் செய்வதுண்டு. எங்குப் பார்த்தாலும் பக்ஷிஜாலங்கள் ஆநந்தமாகப் பறந்துகொண்டிருக்கும். இந்தக் காட்சி திருக்கண்டியூர் போகும்போதெல்லாம் வழக்கமாகக் காணும் காட்சியேதான். ஆனால் திருத்தேர் உத்ஸவம் ஸேவிக்கப்போகும் எங்களுக்கு அன்று ஒரு தெய்விகமான அழகுடன் ப்ரகாசிப்பதாகத் தோன்றியது. அது

வும் ப்ருகு மஹர்ஷியின் மண்டபம் என்கிற இடிந்து பாழடைந்து கிடக்கும் ஒரு மண்டபத்தின் அருகில் வந்தவுடன் உணர்ச்சி மிகவும் அதிகமாகியது.

நண்பர் இந்த மண்டபத்தை எனக்குச் சுட்டிக் காட்டி, 'இந்த மண்டபம் இப்போது பாழடைந்து விட்டது. அதனால் ஹரசாபஹரப் பெருமான் இப்போது இங்கு எழுந்தருள்வது இல்லை. 40-50 வருஷங்களுக்கு முன்னால் பெருமாள் வருஷத்துக்கு ஒரு தடவை இங்கு எழுந்தருளித் திருமஞ்ஜனம் கண்டருளித் திரும்பி எழுந்தருள்வது வழக்கம். இந்தப் பெருமாள் ப்ருகு மஹர்ஷிக்கு அநுக்ரஹம் பண்ணியவர். அந்த ஐதிஹ்யத்தை ஒட்டியது இந்த உத்ஸவம். இப்போது இம்மண்டபம் கவனிப்பா ரில்லாமல் பாழாகிக் கிடக்கிறது' என்றார்.

புராதநமானதும் பழைய ஐதிஹ்யங்களை நினைப்பூட்டுவதுமான இந்த மண்டபம் பாழாகிக் கிடப்பதை நினைக்க வருத்தமாகத்தான் இருந்தது. அதற்காக நான் என்ன செய்ய முடியும்? இப்பொழுதாவது வ்ருத்தர்களான சில பெரியவர்கள் இருந்துகொண்டு இப்படிப்பட்ட ஐதிஹ்யங்களை ஞாபகப்படுத்தி வருகிறார்கள். இன்னுங் கொஞ்ச காலமானால் அது கூட இல்லாமல் போனாலும் போய்விடும். எல்லாம் பெருமாளுடைய ஸங்கல்பம் என்று நினைத்து ஒரு பெருமூச்சு விட்டேன். பிறகு நண்பர் தொடர்ந்தார்.

"சில ஊர்களில் ஒரு ப்ரமாணமு மில்லாத ஒரு கதையைச் சொல்லி, 'அது அந்த க்ஷேத்ரத்தின் ஐதிஹ்யம்' என்று சொல்லுவதைக் கேட்டிருக்கிறேன். அதைக் கேட்கும்போதே அது உண்மையல்ல என்று தெரிந்துவிடும். ஆனால் இந்த ஐதிஹ்யமோ ப்ரஹ்மாண்ட புராணத்தில் திருக்கண்டியூர் மாஹாத்ம்யத்தில் உள்ளது. இது உண்மைதான் என்று காட்டுவதற்கு, பாழடைந்தாவது இன்னும் நம் கண்ணெதிரே நிற்கும் இந்த மண்டபமே போதும்" என்றார். 'ப்ருகு மஹர்ஷிக்குப் பகவான் அநுக்ரஹம் பண்ணிய ஐதிஹ்யத்தைத்தான் கொஞ்சம் சொல்லுமே கேட்போம்' என்றேன். கதை கேட்பதிலுள்ள ஒரு ஆவலைக் காட்டிக்கொண்டு அவரும் ஆரம்பித்தார். அவர் கூறியதின் ஸாரம் பின்வருமாறு:—

"ப்ருகு மஹர்ஷியைப் பற்றி நீர் கேட்டிருக்கிறீ ரல்லவா? அவர் மிகவும் ப்ரஸித்தர்களான ஸப்த ரிஷிகளுள் ஒருவர். எவ்வளவோ வேத மந்த்ரங்களைத் தமது தபோ மஹிமையினால் கண்டவர். ஸாக்ஷாத் ப்ரஹ்மதேவருடைய புத்ரர். இவருடைய வம்சத்தில்தான் பகவான் பரசுராமராக அவதரித்துத் துஷ்ட க்ஷத்ரியர்களை நிக்ரஹித்துத் தர்மத்தை ரக்ஷித்தார். இவைகளெல்லாம் ப்ருகு மஹர்ஷிக்குப் பெருமை கொடுக்கக்கூடிய விஷயங்கள் தான். ஆயினும் இவற்றையெல்லாங் காட்டில் அதிக பெருமை கொடுக்கக் கூடிய விஷயம் ஒன்றும் உண்டு. பிறரால் செய்வதற்கு முடியாததும், மஹத்தானதுமான ஒரு காரியத்தையும் அவர் செய்து கொடுத்தார். அதன் பயனாக உலகமுள்ள அளவும் அழியாத ஒரு பெரிய புகழை அவர் ஸம்பாதித்துக்கொண்டார். பகவானுடைய

திருமார்பிலே நித்யவாஸம் பண்ணுகிற பெரிய பிராட்டியாரைத் தம்முடைய பெண்ணாகப் பெற்றுச் சீராட்டும் பாக்யத்தையும் அடைந்தார்.

இந்த மஹத்தான காரியம் என்ன தெரியுமா? ப்ருகு மஹர்ஷி, ரிஷிகளுக்குள் சிறந்தவர் என்பது மற்ற ரிஷிகளின் முடிவு. ஒரு ஸமயம் யாகம் பண்ண வேண்டு மென்று அவர்களுக்குத் தோன்றியது. ப்ருகு மஹர்ஷியை முன்னிட்டுக்கொண்டு ரிஷிகள் யாகத்தை ஆரம்பித்தார்கள். ஒருவிதக் குறைவு மில்லாமல் அதை நடத்திக்கொண்டுபோனார்கள். யஜ்ஞம் பூர்த்தியடைகிற காலம் வந்துவிட்டது. யாகத்தை எந்தத் தேவதைக்கு அர்ப்பணம் பண்ணுவதென்று அவர்களுக்குத் தெரியவில்லை. எதிரில் பெரியவராக உட்கார்ந்திருந்த ப்ருகு மஹர்ஷியைக் கேட்டார்கள்.

"ஸ்வாமி! நாங்கள் சாஸ்த்ரங்களை யெல்லாம் ஏராளமாகத்தான் படித்திருக்கிறோம். அந்தப் படிப்பு க்லேசத்தைக் கொடுக்கிறதும் புத்தியைச் சலிக்கப் பண்ணுகிறதுமாய் இருக்கிறதேயொழிய நிர்ணயம் பண்ணுகிற ஸமயங்களில் அது உபயோகப்படுகிறதில்லை. 'பரதேவதை யார்?' என்று சர்ச்சை பண்ணிப் பார்த்தோம். எங்களுக்கு நிஷ்கர்ஷம் பண்ண முடியவில்லை. நிஷ்கர்ஷம் பிறந்தா லல்லவா யாகத்தை அவருக்கு அர்ப்பணம் செய்யலாம்? மற்ற தேவதைகளைவிட பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் என்கிற மூன்று தேவதைகள்தான் பெரியவர்கள் என்பது வரையில் தெரிகிறது. இவர்களுக்குள் யார் சிறந்தவர் என்பதைத் தேவரீர்தான் எங்களுக்குத் தெளியப்படுத்த வேண்டும்; தேவரீர் த்ரிமூர்த்திகளின் ஸ்தானங்களுக்கும் சென்று அவர்களுடைய குணங்களைப் பரீக்ஷித்து வரவேண்டும். இந்த மூர்த்திகளுள் யார் ஸாத்விக மூர்த்தி, கல்யாண குணகணங்களால் பரிபூர்ணராயிருப்பவர்? அறியவேண்டும்" என்றார்கள்.

ப்ரஹ்ம ஜ்ஞாநியாகிய ப்ருகு மஹர்ஷிக்குப் பரதேவதா நிஷ்கர்ஷம் இருக்கத்தான் இருந்தது. பரமைகாந்தி ஸார்வபௌமரான இம்முனிவருக்கு ஸ்ரீமந்நாராயணன்தான் அநந்த கல்யாணகுணாகரன் என்றும் தெரியும். தமக்கு நன்றாகத் தெரிந்திருந்தாலும் உலகத்துக்கு இந்த விஷயத்தை நன்றாகத் தெளிவாக்க இது ஒரு வழி என்று நினைத்து முனிவர்களுடைய ப்ரார்த்தனைக்கு இசைந்தார். அவர் முதலில் பிரம்ம லோகத்துக்குச் சென்றார். அங்கு ப்ரஹ்மதேவன் ஸபை கண்கொள்ளாத காட்சியாக இருந்தது. இந்த்ரன் முதலிய திக்பாலகர்க ளெல்லாம் அந்த ஸபையை அலங்கரித்தார்கள். பஞ்ச இந்த்ரியங்களுக்கும் இன்பங் கொடுக்கும் பொருள்களெல்லாம் அங்கு இருந்தன. அப்ஸர ஸ்த்ரீகள் நர்த்தனம் பண்ணுவதும் கந்தர்வர்கள் கானம் பண்ணுவதும் காண்போர் கேட்போர்களைப் பரவச மாக்கின. ஸபையின் நடுவில் நவரத்னகசிதமான ஸ்வர்ண ஸிம்ஹாஸனத்தில் ப்ரபுவான பிரம்மதேவன் கம்பீரமாக வீற்றிருந்தார். ப்ருகு மஹர்ஷி மிகவும் கஷ்டத்துடன் வழியைப் பண்ணிக்கொண்டு ஸபையின் மத்தியை அடைந்து ப்ரஹ்மதேவனை ஸேவித்து நின்றார். ப்ருகு மஹர்ஷி ஒரு ப்ரஹ்ம ஜ்ஞாநி என்பது தெரிந்திருந்துங் கூட—

அவர் தம்முடைய புத்ரர் என்று தெரிந்திருந்துங் கூட—அவர் தமது திருவடிகளில் ஸேவித்து நிற்கிற நிலையிலுங்கூட—பிரம்மதேவர் முகங்கொடுத்து அவரோடு பேசவேயில்லை. ப்ரபுத்தன்மையினால் மதம் பிடித்த இவர் மஹர்ஷிகள் பண்ணும் யஜ்ஞத்தை ஏற்றுக்கொள்ளத் தகுந்தவரல்லர் என்று முனிவர் அங்கிருந்து புறப்பட்டார். நேரே சிவபெருமானுடைய ஸ்தாநத்துக்குச் சென்றார்.

சிவனுக்கும் பிரமனுக்கும்தான் எவ்வளவு வேற்றுமை! சிவன் பிரம்மதேவனைப்போல் பெரிய ஸபையில் வீற்றிருந்து அதிகாரங்களைச் செலுத்திக் கொண்டிருக்கவில்லை. ஏகாந்தமாக உமாதேவியாரோடு விளையாடிக்கொண்டிருந்தார். இப்போது ஸமயம் ஸரியாக இல்லை என்று கொஞ்சம் பொறுத்திருந்து, முனிவர் சிவபெருமான் முன்பு போயிருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. நேரே சிவ ஸந்நிதாநத்துக்குச் சென்று சிவபெருமானையும் உமாதேவியையும் வணங்கினார். என்ன இருந்தாலும் உமாதேவி ஸ்திரீ ஜாதி யல்லவா? திடீரென்று வேறு புருஷன் தங்களுக் கெதிரில் வந்து நின்றவுடன் வெட்கத்தால் தமது பார்த்தாவிடமிருந்து கொஞ்சம் விலகிக் கொண்டார். தம்முடைய ஸரஸ விளையாட்டுகளுக்கிடையே வந்து தங்களது லீலா ரஸங்களைக் கெடுத்த அம்முனிவர்மேல் சிவபெருமானுக்குக் கோபம் உண்டாயிற்று. தமது சூலத்தை எடுத்துக்கொண்டு அவரை அடிக்க ஓடிவந்தாராம். இதைக் கண்டு முனிவர் பயந்து அங்கிருந்து வேகமாக ஓடித் தப்பித்துக்கொண்டார். மஹர்ஷிகளுடைய யாகத்தைச் சிவபெருமானுக்கும் அர்ப்பணம் செய்வது சரியல்ல வென்று அம்முனிவர் அங்கிருந்து பகவானுடைய ஸ்தாநத்துக்குச் சென்றார்.

ப்ருகு முனிவர் வரும்போது பகவான் எழுந்தருளியிருந்த திருக்கோலத்தைத் திருக்கண்டியூர் மாஹாத்ம்யம் மிகவும் அழகாக வர்ணிக்கிறது. பகவான் நீலமேகத்தை நிகர்த்த சாமள மேனியனாக விளங்கினாராம். ஸச்சிதாநந்த ரூபியாக விளங்கினாராம். ஸகல கல்யாண குணங்களாலும் பரிபூர்ணராக விளங்கினாராம். மஹா சாந்தமூர்த்தியாக ஸேவை யளித்தாராம். கருணைக் கடலாகக் காட்சி யளித்தாராம். ஸர்வ ஜகந்மயமாகவும் தோற்ற மளித்தாராம். அவரைச் சூழ்ந்து நித்ய ஸூரிகளும் முக்தர்களும் ஸேவித்து மகிழ்ந்துகொண்டிருந்தார்களாம். ஜகந்மாதாவாகிய பெரிய பிராட்டியாருடைய மடியில் தமது திருமுடியை வைத்துக் கொண்டு சயனித்துக்கொண்டிருந்தாராம். இந்த சயனத் திருக்கோலம் பெரிய பிராட்டியாருடைய திருக்கண்களுக்கும் மற்றவர்களுக்கும் அளவிடமுடியாத ஆநந்தத்தை விளைவித்ததாம்.

இப்படிப்பட்ட மூர்த்திக் கெதிரில் வந்து நின்றார் முனிவர். வந்து என்ன செய்திருக்கவேண்டும்? பரவசராக அவர் திருவடிகளில் விழுந்து ஸேவித்திருக்க வேண்டும். தழதழுத்து வேத மந்த்ரங்களால் அவரைப் போற்றியிருக்கவேண்டும். கண்களால் அவரை ஆரப் பருகியிருக்கவேண்டும். ஆனால் அவர் அவ்வாறு ஒன்றும் செய்யவில்லை. அது மட்டுமில்லை. காரண மில்லா

மல் பகவான்மேல் கோபமும் கொண்டாராம். இந்தக் கோபத்துக்கு அவர் சொல்லிய காரணம்: " தேசமெங்கும் சுற்றிக் களைத்துப் போய் நான் இங்கே வந்திருக்கிறேன். என்னை எழுந்திருந்து உபசரிக்காமல் இவர் இப்படிப் படுத்திருப்பதா ? " என்று. கோபம் பொல்லாதது அல்லவா ? வேகமாக ஓடிவந்து பகவானை ஓங்கி உதைத்தார். அதுவும் ஜகன்மாதாவாகிய பெரிய பிராட்டியார் வாஸம் பண்ணுகிற பரம மங்களமான திருமார்பிலே உதைத்தார்.

பெருமாளுடைய திருமேனி காயாம்பூவை ஒத்தது. நிறத்தினால் மாத்ரமன்று; குணத்தினாலும் கூடத்தான். மென்மைக்கும் அழகுக்கும் பேர்போன இந்தக் காயாம்பூ செடியிலுள்ள வரையில் மிகவும் அழகாகத்தான் இருக்கும். கையால் தொட்டுப் பறித்துவிட்டால் வாடிப்போய்விடும். அதைப் போன்றதல்லவா பகவானுடைய திருமேனியும் ? புஷ்பத்திலேயே பிறந்து வளர்ந்து ஸௌகுமார்யத்துக்குப் பேர்போன பெரிய பிராட்டியார்கூடத் தமது மெல்லிய கைகளால் ம்ருதுவாகத் தொட்டால் கூட துவண்டுபோய் விடுமோ என்று பயந்து பயந்து தொடுகிற திருமேனி இது. இதை உதைத்தவர் கால் எப்படிப்பட்டது ? சதையெல்லாம் ஒட்டி எலும்புந் தோலுமாக இருப்பது. தபஸ் என்றும் வ்ரதம் என்றும் நிர்த்தாக்ஷிண்யமாகவும் முரட்டுத்தனமாகவும் க்லேசஞ் செய்யப்பட்டது. இந்தக் காலால் பகவானை மெதுவாக உதைக்க வில்லை. ஓங்கி உதைத்தார். இதை நினைக்கும்போதே நமக்குக் கண்களில் ஜலம் வருகிறதல்லவா ! இதைப் பார்த்துக்கொண்டிருந்த பிராட்டிக்குத் திருவுள்ளம் எப்படி இருக்கும் ?

அந்த ப்ராம்ஹணருடைய காலால் உதைப்பட்ட பகவான் சடக்கென்று எழுந்திருந்தார். எழுந்து, 'எழுந்தருளவேணும் எழுந்தருளவேணும்' என்று அழைத்தார். 'தேவரீர் க்ஷேமமா ? தேவரீரைச் சேர்ந்த முனிவர்களெல்லாம் தங்கள் தபஸ்ஸுக்கு இடையூறு இல்லாமல் ஸுகமாக இருக்கிறார்களா ?' என்று விசாரித்தார். 'இதோ பாத்யம் ; திருவடி சோதித்துக் கொள்ளவேண்டும்.' என்றார். 'இதோ அர்க்யம்' என்று கைகளில் ஜலம் விட்டார். 'இதோ ஆசமநீயம்' என்று ஆசமநத்துக்குத் தீர்த்தம் கொடுத்தார். கடைசியில் 'முனிவர் பெருமானே ! என்னைத் தேவரீர் காலால் உதைத்து என்ன ப்ரயோஜநம் ? என் உடல் மிகக் கடினமானது. என் மார்புக்கு ஒன்றும் கேடு வராது. இப்படிப்பட்ட கடினமான சரீரத்தை உதைத்ததால் தேவரீருடைய திருவடிகளுக்கு ஏதாவது நோவுண்டாயிற்றோ ?' என்று ஆதரவுடன் விசாரிக்க ஆரம்பித்தார். கடைசியில், 'தேவரீர் இங்கு எழுந்தருளியதைப்பற்றி எனக்கு ரொம்பவும் ஸந்தோஷம்; அடியேனால் என்ன காரியம் ஆகவேண்டும் ? நியமித்தால் செய்கிறேன்' என்று கூறியருளினார்.

இதைக் கேட்ட முனிவர் ப்ரமித்துவிட்டார். தாம் மேற்கொண்ட பரிக்ஷை முடிந்துவிட்டது. நிறைந்த குடம் தளும்பாது. தாம் போய்ப்

பார்த்த மூன்று ஸ்தானங்களிலும் எவ்வளவோ சிறப்புகளைத்தான் கண்டார். ‘பிரமனுடைய ஐச்வர்யத்துக்கு அளவில்லைதான். ஆனால் இந்த ஐச்வர்ய மதம் மேலிட்டு ராஜஸபாவம் அவரிடம் தூக்கியிருந்தது. அங்கிருந்து போய்ப் பார்த்த சிவபெருமானுடைய ப்ரபாவங்கள்தான் கொஞ்சமா? ஆனால் அங்கும் கொஞ்சம் குறை இருக்கத்தான் செய்தது. பகவானிடமோ ஸத்வம் தலை தூக்கி நின்றது. ‘தாம் லோகத்துக் கெல்லாம் நாயகனாக இருக்கச் செய்தே, காரண மில்லாமல் தம்மை ஓங்கி உதைத்த அற்ப வஸ்துவாகிய நம்மை ஆதரித்தாரே’ என்று இப்படிப்பட்ட எண்ணங்கள் அவருடைய நெஞ்சில் ஓடின. இதெல்லாம் சிறிது நேரந்தான். தாம் வந்த காரியம் ஆகிவிட்டது. பிறகு தாமதம் செய்யாமல் பெருமாளிடம், ‘போய்விட்டுச் சீக்கிரம் திரும்பி வருகிறேன்’ என்று கூறிவிட்டு ரிஷிகள் யாகம் பண்ணும் இடத்துக்கு ஓடினார்.

“ஸ்ரீமந்நாராயணன் தான் பரதேவதை; அவர்தான் ஸகல கல்யாண குண பரிபூர்ணர்” என்று அவர் ரிஷிகளிடம் சொன்னதும், ரிஷிகள் தங்கள் யாகத்தைப் பகவானுக்கு அர்ப்பித்ததும் பிறவும் நாம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இவ்வாறு அந்தப் பரமைகாந்தி ஸார்வபௌமரான ப்ருகுமஹர்ஷி, அந்த ரிஷிகளுக்கும் அவர்கள் மூலமாக நமக்கும் பகவானுடைய சிறப்பை உணர்த்திப் பெரிய கீர்த்திக்குப் பாத்ரமாகிவிட்டார். அவருக்கு லக்ஷ்மிதேவி பெண்ணாக அவதரித்த கதை வேறு புராணங்களில் சொல்லப்படுகிறது. ஆனால் பகவானை உதைத்ததால் ஏற்பட்ட பெரிய தோஷத்துக்கு விமோசந மென்ன?

பெருமாளை உதைத்த தோஷத்தால் அவருடைய புத்தி மயக்க மடைந்தது. தபஸ் செய்யும்போது புத்தி நிலை நிற்கவில்லை. மனத்தில் நிம்மதியில்லை. பைத்யம் பிடித்தவர்போல் ஆகிவிட்டார். இந்த நிலையில் உலகமெல்லாம் திரிய ஆரம்பித்தார். அப்போது அத்ருஷ்ட வசமாகக் காவேரி தீரத்திலுள்ள இந்த க்ஷேத்ரத்துக்கு வந்து சேர்ந்தார். அப்போது இங்கே ஒரு காடு இருந்தது. காடானாலும் அது மிகவும் அழகாகவே இருந்தது. அதைப் பார்த்த ப்ருகு மஹர்ஷிக்கு ஆநந்தம் உண்டாயிற்று. இடத்தின் அழகில் ஈடுபட்டார். அந்த இடத்தைச் சுற்றிப் பார்த்தார். அப்படிப் பார்க்கையில் ஒரு பெருமாள் ஸந்நிதி தென்பட்டது. எத்தனையோ கல்பங்களுக்கு முன்னால் ஏற்பட்டமையால் அது கொஞ்சம் ஜீர்ணமாகத்தான் இருந்தது. ஆனால் அது ஒரு திவ்யமான ஆலயம்; மனிதன் கட்டியதல்ல என்பது தெரிந்தது. கோவிலுக்கு எதிரில் ஒரு பத்மஸரஸ் இருந்தது. அதன் கரையில் ஒரு கதம்ப மரமும் இருந்தது. கோகிலங்கள் கூவுவதும் வண்டுகள் பாடுவதும் இடத்தின் ரமணீயதையை அதிகப்படுத்தின. அங்கு ஆச்ரமங்களைக் கட்டிக்கொண்டு பல முனிவர்கள் தபஸ் செய்துகொண்டிருந்தார்கள்.

ப்ருகு மஹர்ஷி அந்த ரிஷிகளிடம் போய் அந்த க்ஷேத்ரத்தைப்பற்றி விசாரித்தார். அவர்கள் அது பகவான் மஹாபலிசக்ரவர்த்தியை அநுக்ரஹிக்க ஆவிர்ப்பவித்த இடமென்றும், அதன் பெயர் கண்டக க்ஷேத்ரம் என்றும் கூறி

அதன் ப்ரபாவங்களையும் சொன்னார்கள். இதை யெல்லாம் கேட்ட அம் மஹர்ஷி, இந்த க்ஷேத்ரத்தைத் தாம் வந்து அடைவதற்குக் காரணமாக இருந்த தம் அத்ருஷ்டத்தைக் குறித்து ஸந்தோஷித்தார். பத்ம தீர்த்தத்தில் நீராடி, பகவானை ஸேவித்தவுடனேயே பகவானைக் காலால் உதைத்த தோஷம் போய் விட்டது. பிறகு முனிவர் அங்கேயே வெகுநாட்கள் இருந்து சிதிலமாக விருந்த திருக்கோயிலைச் செம்மையாகக் கட்டி, இன்னும் பல கைங்கர்யங் களும் செய்து, பெருமாளுக்குப் பலவிதமான உத்ஸவங்களையும் பண்ணிவைத் தார். பெருமாள் அவருடைய பூஜைகளாலும் கைங்கர்யங்களாலும் திரு வுள்ள முகந்து அவருக்குப் ப்ரத்யக்ஷமாகிப் பல வரங்களையுங் கொடுத்தாராம். என் நண்பர் இவ்வாறு கூறி முடித்ததும் எனக்கு உணர்ச்சி மிகுதியானல் மெய் சிலிர்த்தது.

[தொடரும்]

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்.

ஸர்வதாரி ஸு ஐப்பசி (துலா) மீ

17—10—48	1உ	ஞாயிற்றுக்கிழமை	...	துலா பூர்ணிமா திதி: விஷுபுண்ய காலம் துலா ஸ்நாநாரம்பம் [இன்று துலா ஸங்க்ரமண தர்ப்பணம்]
28—10—48	12உ	வியாழக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி
30—10—48	14உ	சனிக்கிழமை	...	(ராத்ரி) நரக சதுர்த்தசி ஸ்நாநம்
31—10—48	15உ	ஞாயிற்றுக்கிழமை	...	சதுர்த்தசி – அமாவாஸ்யை திதி த்வயம்: ஸர்வ அமாவாஸ்யை : தீபாவளிப் பண்டிகை
1—11—48	16உ	திங்கட்கிழமை	...	துலா சுக்ல ப்ரதமை திதி : *
5—11—48	20உ	வெள்ளிக்கிழமை	...	ஸ்ரீ மணவாள மாமுனிகள் திருநக்ஷத்ரம்
8—11—48	23உ	திங்கட்கிழமை	...	துலா சுக்ல அஷ்டமி திதி: ஸ்ரீ பொய்கை யாழ்வார் திருநக்ஷத்ரம்
9—11—48	24உ	செவ்வாய்க்கிழமை	...	அதிதி : ஸ்ரீ பூதத்தாழ்வார் திருநக்ஷத்ரம்
10—11—48	25உ	புதன்கிழமை	...	துலா சுக்ல நவமி திதி : ஸ்ரீ பேயாழ்வார் திருநக்ஷத்ரம்
12—11—48	27உ	வெள்ளிக்கிழமை	...	ஸர்வ (உத்தாந) ஏகாதசி
15—11—48	30உ	திங்கட்கிழமை	...	துலா – வ்ருச்சிக சுக்ல சதுர்த்தசி திதி :

வ்ருச்சிக ரவி 44.3 கட முகம் [அஹஸ் 29-10; இரவு மத்யம் 29-10 + 15-25—44-35 ஸங்க்ரமணம் 44 . 3. அதாவது நடு இரவுக்கு முன்னதாகவே யாகையால் இன்றே ஸங்க்ரமண தர்ப்பணம்]

---

* **குறிப்பு**:—இந்த மாஸம் 16உ திங்கட்கிழமை தினம் ஸூர்ய க்ரஹணம் ஒன்று ஸம்பவிக்கிற தென்றும் அது இந்தியாவின் நிர்ருதி மூலையில் அத்யல்பமாகவும் மற்றை இடங்களில் [மதராஸ் பம்பாய் டில்லி முதலிய இடங்களில்] சுத்தமாகத் தெரியா தென்றும் கணிதக்காரர்கள் சொல்லுகிறார்கள். அதை ப்ரமாணமாக எடுத்துக் கொண்டு இந்தியாவி லுள்ளவர்கள் க்ரஹணாநுஷ்டாநத்தை த்யஜித்து விடலாம். அத்யல்பமாகத் தெரியு மிடத்திலும், தெரியவில்லை யென்றே த்யஜிக்கலா மென்று சாஸ்த்ரம் சொல்லுகின்றது. ஆகையால், ப்ரதமா ச்ராத்தத்தை இன்றே செய்யலாம்.

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸபா, தேரழுந்தூர்.

ஸ்ரீ ஜயந்தி மஹோத்ஸவத்தை முன்னிட்டு, இவ்வூர் ஸ்ரீ அஹோபில மடத்தில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸ்ரீநிவாஸன் கண்ணன் முதலிய எம் பெருமான்களுக்கும், மற்றும் ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுக்கும் ஆவணி௴ 13௳ சனிக்கிழமை தினம் விசேஷ திருமஞ்சநமும், கண்ணனுக்கு ஸ்ரீ ஜயந்தி மஹோத்ஸவமும் விமர்ஶையாக நடத்தப்பட்டன. நாளது புரட்டாசி௴ 14௳ (29–9–48) புதன்கிழமை முதல், 23௳ (8–10–48) வெள்ளிக்கிழமை வரை 10-நாட்கள் ஸ்ரீ ஆதிவண் சடகோப மஹா தேசிகனுடைய வார்ஷிக மஹோத்ஸவம் ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸம்ப்ரமமாக நடைபெறும்.

*　*　*　*　*　*　*

ஸுமார் 40-வர்ஷங்களாகப் புதுக்கோட்டை ராஜ ஸம்ஸ்தாநத்தில் தாநாதிகாரி யாயும், சதுஶ்ஶாஸ்த்ர பாரங்கதராயும் எழுந்தருளியுள்ள வித்வந் மண்டல மண்டந வித்யா வாரிதி மதத்ரய நிரூபக வித்வான் ஸ்ரீ. உப. காளி V. ரங்காசார்ய ஸ்வாமி, இந்தத் திவ்ய தேசத்தைத் தமது வாஸஸ்தாநமாகத் திருவுள்ளம்பற்றி, இங்கு ஒரு க்ருஹத்தை வாங்கிக் கொண்டு இவ்விடம் எழுந்தருளி யிருக்கிறார். இது இத்திவ்யதேசவாஸிகள் செய்த தவப் பயனேயாகும். ப்ரக்ருதம் ஸ்ரீ ஜயந்தி மஹோத்ஸவத்தை முன்னிட்டு, இந்த ஸ்வாமியை உபந்யாஸத்துக்கு ப்ரார்த்திப்பதற்காகவும், மற்றும் ஸ்ரீமடத்தில் ஸ்தாபிதமாயுள்ள ஸபைக்கு எழுந்தருளி வித்யார்த்திகளை அநுக்ரஹிப்பதற்காகவும், ஷை ஸபையார் ஸ்ரீ ஸ்வாமியை மேளவாத்ய மர்யாதைகளுடன் ஸ்ரீமடத்துக்கு எழுந்தருளப் பண்ணிக் கொண்டு வந்தனர். ஸ்வாமி அங்குள்ள ஸ்ரீ கோஶாலயத்தைக் கடாக்ஷித்து, அதற்கு அநர்க்கமான சில கோஶங்களை அநுக்ரஹித்தருளினர். வித்யார்த்திகளைப் பரீக்ஷை செய்து, அவர்கள் உத்ஸாஹத்தையும் ச்ரத்தையும் கண்டு அவர்களை அநுக்ரஹம் செய்தருளினர். அநந்தரம் ஸபையாருடைய ப்ரார்த்தனைக் கிணங்க, ஸ்ரீ க்ருஷ்ணாவதார வைபவத்தைப்பற்றி அம்ருதவர்ஷம் போல் இரண்டுமணி அவகாஶம் உபந்யாஸம் செய்தருளினர். பிறகு ஸபையின் உபாத்யக்ஷர் ஸ்வாமி வந்தநோபசாரம் கூற, இரவு 7½–மணிக்கு ஸங்கம் முடிவுற்றது.

*　*　*　*　*　*　*

ஷை வித்வான் ஸ்வாமி இத்திவ்யதேசத்தில் தாம் வாங்கியுள்ள திருமாளிகையில் 29—8—48—ல் க்ருஹப்ரவேஶம் செய்ருளினர். அம்மஹோத்ஸவம் வெகு வைபவத்துடன் ஸம்ப்ரமமாக நடைபெற்றது. அவ்வைபவத்துக்கு ஸ்ரீமதழகியசிங்கர், ஸ்ரீ ஶங்கராசார்ய ஸ்வாமிகள், மற்றும் பல வித்வான்கள், ஸ்வாமிக்குப் பட்டு சால்வை முதலியவைகளை ஸந்மாநமாக வழங்கினர். அன்று சுமார் 200-திருநாமங்களுக்குத் ததீயாராதநம் நடந்தேறிற்று. அங்கு வந்திருந்தோர் அனைவரும் ஸ்வாமியின் பரிபூர்ண க்ருபைக்குப் பாத்ரமானார்கள்.

கடாம்பி. R. நரஸிம்ஹாசார்யர்,

[கார்யதர்ஸி.]

ஸ்ரீ தில்லஸ்தாநம் ஸ்வாமியின் உத்தாந மஹோத்ஸவம்

திருவஹீந்த்ரபுரத்தில் ஸ்ரீ அஹோபில மடத்தில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ தில்ல ஸ்தாநம் ஸ்வாமி, தமது சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் பூர்த்தியாகி, உத்தாநார்த்தம் திருவஹீந் த்ரபுரத்தை யடுத்த நத்தப்பட்டுக்கு எழுந்தருளி உத்தாந மஹோத்ஸவம் கண்டருளின தாகவும், உள்ளூர் அக்ரஹாரிகாள் அநேக ஸ்வாமிகள் அவ்விடத்துக்கு எழுந்தருளி மஹோத்ஸவத்தை மிக்க சிறப்புடன் நடத்திவைத்து விசேஷ ததீயாராதநத்தைச் செய்து வைததாகவும், அன்று ஸாயம் மீண்டும் ஸ்ரீ ஸ்வாமி ஸ்ரீ மடத்துக்கு எழுந்தருளி அவ் விடத்திலேயே ப்ரக்ருதம் எழுந்தருளி யிருப்பதாகவும், அக்ரஹாரிகாளுடைய ப்ரார்த் தநையின் பேரில் ஸ்ரீ ஸ்வாமி இன்னும் ஒரு மாஸ காலம் திருவஹீந்த்ரபுரத்திலேயே எழுந்தருளி யிருக்கக்கூடு மென்றும் ஸ்ரீ. உப. திருமலாசார்ய ஸ்வாமி அறிவிக்கிறார்.

* * * * * * *

கரை புரண்ட கருணை

[ஸ்ரீமதி. S. கோதாராணி]

ஸ்ரீ ஆண்டாளின் திவ்யாவதாரமே அவருடைய கரைபுண்ட கருணையின் செய லாகும். அவர் அவதரித்த மாதம், நாள், நக்ஷத்ரம் இவற்றை ஆராயின் அது அற்புதத் திலும் அற்புதம். உலகம் எதை மிகவும் உயர்வாகக் கொண்டாடுமோ அதை ஒதுக்கி, புறக்கணித்துத் தள்ளப்பட்டவற்றை ஆதரிப்பது தெய்விகச் செயல் போலும். கண்ணன் பிறந்த இடம் ஏன் சிறைச்சாலை யாகவேண்டும்? அவன் பிறந்த வேளை மையிருட்டாக ஏன் இருக்கவேண்டும்? உலகியல் அறியாத இடைக் குலத்தில் அவன் ஏன் அவதரிக்க வேண்டும்? அதுபோல் நம் அன்னையார் ஆண்டாள், தாம் அவதரிக்கத் தேடிய மாதம் ஆடி. ஆடி மாதம் எதற்கும் தள்ளுபடி என்பதை அறியார்? பிறந்த நாள் செவ்வாய்க்கிழமை. 'கேட்டை மூட்டை செவ்வாய்க்கிழமை' என்பதை அறிவோமே. நக்ஷத்ரம் பூரம். பூரம் பூராடம் பூரட்டாதி மூன்றிற்கும் எவ்வுளவு மர்யாதை உலகத்தவர் கொடுக்கின்ற னர்? இப்படி மனிதன் உதறித் தள்ளியவற்றைத் தாம் ஏற்றுப் பெருமை யற்றவையாகக் கருதப்பெற்ற மாதம் நாள் நக்ஷத்ரங்களுக்குப் பெரும்பெருமை அளிக்கவே கருணை கொண்டு இப்பெருமாட்டியார் இந்நிலவுலகில் அவதரித்தா ரென்பதைச் சிந்திக்கச் சிந்திக்கச் சிந்தை தித்திக்கின்றது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

யோ(அ)ந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந் நமோ பகவதே புருஷாய துப்யம்॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஒரு அபசார க்ஷாபணம்

ஒவ்வொரு ஸஞ்சிகையிலும் 'ஸம்பாதகரின் குறிப்புக்கள்' என்னும் தலைப்பின்கீழ் அடியேன் சில உக்திகளை எழுதுவதுண்டு. சென்ற மாஸத்து ஸஞ்சிகையில் அம்மாதிரி ஒரு விண்ணப்பத்தையும் செய்து கொள்ள அடியேன் அஶக்தனாக இருந்துவிட்டபடியால், அந்தக் குறிப்புக்கள் எழுதப்படாமல் நின்று விட்டன. நமது ஸௌஹ்ருத்துக்களிடம் அடியேன் அம்மாதிரி அபசாரப்பட்டிருப்பேனோ வென்று பயந்து அதற்காக அவர்களிடம் க்ஷமையை ப்ரார்த்திக்கிறேன்.

*　　*　　*　　*

ஸ்ரீ ந்ருஸிம்ஹாவதாரத்தில் அருமையான சில விஷயங்கள்

ஸர்வ வ்யாபியான பரம்பொருள் ஸ்ரீமந் நாராயணனே யென்ற உண்மை ஸ்ரீ ந்ருஸிம்ஹாவதாரத்தின் சேஷ்டிதங்களால் நன்கு விளங்குகின்றதென்பதை ஸ்வல்ப காலத்துக்குமுன் ஒரு ந்ருஸிம்ஹ பக்தர் மிக்க ரஸத்துடன் எடுத்துக் காட்டினார். அவை இப்பொழுது நமது புத்திக்குக் கோசரமானபடியால், அவைகளை இவ்விடத்தில் ப்ரஸ்தாவிக்கத் துணிகின்றோம். அந்த ரஸத்தை நமது ஸௌஹ்ருத்துக்களும் அனுபவிக்க வேண்டுமென்பதே நமது கருத்து. அந்தப் பக்தரின் திவ்ய ஸூக்திகளை உள்ளபடியே வெளியிட்டால் விரிவாகுமென்று எண்ணி அதைச் சுருக்கி எழுதுகின்றோம்.

ஹிரண்யன் பிறந்து வளர்ந்து அருந் தவம்செய்து பெரு வரங்கள் பெற்று உலகத்திலே வைதிகர்கள் வேத மோதவும் யாகங்கள் புரியவும் கூடாவென்றும், தன்னையே கடவுளாகக் கொண்டு அனைவரும் தன்னையே வந்தித்து வழிபடவேண்டுமென்றும் கட்டளையிட்டான். அவ்வாஜ்ஞை எங்கும் தவறாமல் நடைபெற்று வந்த காலத்தில் வேதம் முதலியன யாவும் இருந்தவிடம் தெரியாதபடி மறைந்திருந்தன. இப்படிச் சிலகாலம் கழிந்தபின்னர் எம்பெருமான் நரசிங்காவதாரம் செய்து ஹிரண்யனைத் தொலைக்க, அதன்பிறகு அவ் வேதம் முதலிய வனைத்தும் மீண்டும் தலையெடுத்தன. இவ் விஷயத்தை எடுத்துக் காட்டி ஸகல ஜந்துக்களையும் வாழ்விப்பவன் எம்பெருமானே யென்ற உண்மையை அவர் உணர்த்துகிறார்.

1\. வேறே ஒரு தூணிலிருந்து நரசிங்கமூர்த்தி தோன்றினால், 'முன்னமே ஒரு நரசிங்கத்தை உள்ளே வைத்து நாட்டிய தூண் அது' என்று அவன் சங்கிக்கக் கூடுமாதலால், அந்த சங்கைக்கு இடமில்லாதபடி அந்த ஹிரண்யனே நாட்டின வாயில் தூணிலிருந்தே எம்பெருமான் நரசிங்கமாய்த் தோன்றினான்.

2. வேறு யாரேனும் கையால் தட்ட அத் தட்டிய இடத்திலிருந்து தோன்றினால், அவர் தம் கையில் ஒரு நரசிங்கத்தை அடக்கிக் கொண்டுவந்து தூணிலே பாய்ச்சினார்' என்று சொல்லக்கூடு மாதலால், அதற்கு இடமில்லாத படி அவ் விரண்யன் தன் கையாலே தட்டிய வளவில் தோன்றினான்.

3. அவன் ஓரிடத்தில் தட்ட மற்றோரிடத்தில் நரசிங்கம் தோன்றினால், 'எங்குமுளன்' என்று ப்ரஹ்லாதன் செய்த ப்ரதிஜ்ஞை தவறி ஹிரண்யன் செய்த ப்ரதிஜ்ஞை நிலைநிற்குமாதலால், அதற்கு இடமில்லாதபடி அவன் தட்டின இடத்திலிருந்தே தோன்றினான்.

4. அவன் தட்டின பின்பு சிறிதுநேரம் சென்று நரசிங்கம் தோன்றினால், 'நான் தட்டினபொழுது எம்பெருமான் அங்கில்லை' என்று அவன் சொல்லி உண்மையை மறுக்கக் கூடுமாதலால், அதற்கு இடமில்லாதபடி அவன் அங்கு அப்பொழுதே அந்த மூர்த்தி அவன் வீயத் தோன்றினான்.

5. அவன் தோன்றின பின்னர் ஹிரண்யன் வெல்லவும் மூர்த்தி தோற்கவுமானால் 'எங்குமுளன்' என்றும் உண்மை நிலைத்தாலும் பரத்வம் ஸித்தியாமல் போய்விடுதல்பற்றி அங்ஙன மாகாதபடி அக் கொடியவனைத் தவறாது அழித்தான்.

6. தேவர் முதலிய நால்வகைப் பிறப்புக்களில் ஒவ்வொன்றினாலும் தான் சாகாதபடி அவன்பெற்ற பெறு வரம் பழுதுபடாதிருத்தல் வேண்டி நரங் கலந்த சிங்கமாய்த் தன்னைத் தானே அவதரிப்பித்துக் கொண்டு தோன்றினான்.

7. அஸ்த்ராதிகள் ஒன்றினாலும் சாகாதபடியும் ஈரமுள்ளவை ஈர மில்லாதவைகளினால் ஒன்றினாலும் பொன்றாதபடியும் பெற்ற வரம் வீண் போகாதவாறு நார் கிழிப்பாரதுபோல அவனைத் தன் கைந் நகங்களினாற் கிழித்துக்கொன்றான்.

8. பகலிலும் இரவிலும் சாகாதபடி பெற்ற வரம் பொய் படாதவாறு மாலைப் பொழுதில் கொன்றான்.

9. பூமியிலும் வானத்திலும் சாகாதபடி பெற்ற வரம் பொய்க்காதபடி தன் மடிமீது வைத்துக் கொன்றான்.

10. வீட்டின் அகத்திலும் புறத்திலும் இறவாதபடி பெற்ற வரத்திற்கு விரோதமின்றிக்கே வாயிற்படியின் மீது வைத்துக்கொண்டு கொன்றான்.

பரப்ரஹ்ம லக்ஷண வாக்யங்களில் ஒரு ஸந்தேஹம்

முன் ஸஞ்சிகை ஒன்றில் பரப்ரஹ்ம லக்ஷண விஷயமாக ஒரு ஸந்தேஹத்தை ஸஹ்ருதயர்களுக்கு விண்ணப்பித்துக்கொண்டிருந்தோம். அந்த ஸந்தேஹத்திற்கு ஸமாதாநத்தை மதுராந்தகம் ஸ்ரீ. உப. தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமி முதலிய வித்வாங்கள் அநுக்ரஹித்திருக்கிறார்கள். அதில் மற்றுமொரு ஸந்தேஹம் ஏற்படுவதால், அதைத் தெளிந்துகொள்ளும் பொருட்டு அந்த விஷயத்தைப்பற்றி மறுபடியும் ப்ரஸ்தாவிக்கத் துணிகின்றோம்.

பரப்ரஹ்மத்திற்கு, உபநிஷத்தில் 'யதோ வா' இத்யாதி வாக்யத்தால் விபூதி விஶிஷ்டாகாரத்தாலும் 'ஸத்யம் ஜ்ஞாநம்' இத்யாதியால் குணங்களைக் கொண்டும் லக்ஷணம் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கின்றது. இவைகளுள் இரண்டாவது வாக்யத்தை அநாதரித்துவிட்டு முதல் வாக்யத்தை விஷய வாக்யமாக எடுத்துக்கொண்டு 'ஜந்மாத்யஸ்ய யத:' என்னும் ஸூத்ரத்தை வ்யாஸ பகவான் ஸூத்ரித்தருளி யிருக்கிறார். ஏன் அவ்விதம் அவர் ஸூத்ரித்தார் என்று நாம் முதலில் கேட்டிருந்தோம். நமது ஸந்தேஹம் என்னவென்றால்:—'ஜந்மாதி காரணத்

வத்தைக் குறிக்கும் முதல் வாக்யம் விபூதி விஶிஷ்டமாக ப்ரஹ்மத்தைப் பேசுகிற படியால், அது ஜகதுபாதாநத்வத்தை மாத்ரம் ப்ரஸ்தாவிக்கின்றது என்றும், இரண்டாவது வாக்யம் குணங்களைப் பற்றியதாகையால், அது ஜகந்நிமித்தத் வத்தை ப்ரஸ்தாவிக்கின்றதென்றும் சொல்ல ப்ரஸங்கிக்குமே. உபாதாநத்வத்தை யும் நிமித்தத்வத்தையும் குறிக்கும் வாக்யமே பூர்ண லக்ஷணமாகுமென்று ஶாஸ்த்ரம் சொல்லுகிறபடியால், இரண்டு வாக்யங்களிலும் ஒரு ந்யூநதை இருக் கிறதாகத் தெரிகின்றதே. அப்படியிருக்க, வ்யாஸ பகவான் ஒன்றை விட்டு மற் ெறான்றை விஶேஷித்துக் கொள்ளக் காரணம் ஒன்றுமில்லையே' என்பதுதான் நமது ஸம்ஶயம்.

இதற்கு ஸ்ரீ வீரராகவாசார்ய ஸ்வாமி அநுக்ரஹித்திருக்கும் ஸமா தாநமாவது:—"ஜகஜ்ஜந்மாதி காரணத்வம் விபூதி விஶிஷ்ட ப்ரஹ்ம நிஷ்ட மென்றும், அந்தக் காரணத்தால் அது ஜகதுபாதாநத்வத்தை மாத்ரம் குறிக்கு மென்றும் சொல்வது சரியன்று. அது நியந்த்ருத்வம் சிதசித் தாரணம் முதலிய வைகளால் ஜகந் நிமித்தத்வத்தையும் குறிக்கின்றதென்றே சொல்லவேண்டும். ஆகையால் அதில் எவ்வித ந்யூநதையும் இல்லை" என்பது தான். அதாவது: முதல் லக்ஷணம், மற்றவைகளைக் காட்டிலும் வ்யாவர்த்திக்கும் வஸ்துவை ப்ரதீதிக்குக் கொண்டு வருவதில் பர்யவஸாநம் பெறுகிறபடியால் அதில் நிமித்த காரணத் வம் உபலக்ஷித மாகின்றது என்பது தான். இப்படிச் சொல்வதால் இந்த லக்ஷணத்திற்கு ஏற்ற முண்டாகின்றது என்பது அவர் திருவுள்ள மென்று நாம் அறிகிறோம். அப்படியானால் 'இரண்டாவது லக்ஷணம் ஶுத்த ஸ்வரூப மாத்ரத்தில் நிஷ்டை பெற்றிருந்தாலும் ஸர்வஜ்ஞத்வம் நியந்த்ருத்வம் முதலிய குணங்களை ஆதாரமாகக் கொண்டு சித்சித் விஶிஷ்ட ப்ரஹ்மம் ப்ரதீ திக்கு வருகிறபடியால் அது உபாதாந காரணத்வத்தை உபலக்ஷிக்கின்றது என்று ஏன் உபபாதிக்கக் கூடாது? அப்படி உபபாதிப்பது யுக்தமானால் இந்த லக்ஷணமும் மற்றொன்றைப்போல் தோஷ மற்ற தாகின்றதே; எந்தக் காரணத்தால் ஒன்று அங்கீகரிக்கத் தகுந்ததாகவும் மற்றொன்று பரித்யாகார்ஹமு மாகும்?' என்னும் ப்ரச்நம் எழுகின்றது. இரண்டு வாக்யங்களும் துல்ய யோக க்ஷேமமாக இருந்தால் ஒன்றைவிட்டு மற்றொன்றை ஆதரிப்பதற்குக் காரணம் இல்லையே என்னும் ஸந்தேஹம் ஸமாஹிதமாகாமல் நிற்கின்றது.

இந்த விஷயத்தை ச்ருதப்ரகாசிகையில் பின் வருமாறு விசாரித்திருக் கிறார். 'ஶுத்த ஸ்வரூபத்தை விளக்கும் குணங்களால் ஸ்வரூபம் லக்ஷித மானால் விசேஷணமாகிற சிதசித்துக்கள் குணாபேக்ஷயா வெளிப்பட்டவை யாகையால் சிதசித்துக்களாகிற விபூதிக்கு க்ரஹண மாகாமல் நின்றுவிடும். ஸ்ருஷ்டி முதலியவைகளை விஷயமாகவுடைய விபூதியைக் கொண்டு ஸ்வரூபம்

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் சந்தா வரவு

[21—11—48 முதல் 20—12—48 வரை]

			ரூ.
11	ஸ்ரீ.	V. K. ராகவாசார்யர், ஜி. பி. ஐ. ரயில்வே, பம்பாய்	— 3
241	,,	T. பார்த்தஸாரதி ஐயங்கார் B. A. L. T., க்ருஷ்ணப்ப நாயகன் அக்ரஹாரம், சென்னை	— 3
276	,,	V. சக்ரவர்த்யாசார்யர், Rtd. Registrar, கல்யாணபுரம்	— 3
277	,,	அண்ணாமலைப் பல்கழக நூனிலையாளர்	— 3
419	,,	K. பார்த்தஸாரதி ஐயங்கார், பண்ணுருட்டி	— 3
422	,,	R. சக்ரபாணி ஐயங்கார், இணை திருமங்கலம்	— 3
508	,,	M. ரங்கஸ்வாமி ஐயங்கார், மயிலாப்பூர், சென்னை	— 3
597	,,	S. K. ஸ்ரீநிவாஸாசார்யர், சோகத்தூர்	— 3
638	,,	ரங்கநாயகி அம்மாள், அன்னுதூர் கிராமம்	— 3
687	,,	R. ஸ்ரீநிவாஸையங்கார், Port Conservator, நாகப்பட்டினம்	— 3
707	,,	G. சௌரிராஜையங்கார், கோபால ஸமுத்ரம், ஆணிக்காரன் சத்திரம், தஞ்சை	— 3
793	,,	V. C. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், ‘ கனக ஸ்ரீ நகர் ’, கதீட்ரல் போஸ்ட், சென்னை	— 3
828	,,	V. S. ஆழ்வார் ஐயங்கார், வத்ராயிருப்பு, (ராமநாதபுரம்)	— 3
837	,,	R. V. க்ருஷ்ணமாசார்யர், புது டெல்லி, G. H. Q. P. O.	— 3
		மொத்தம் ரூ.	42

Regd. M. 4437.

ஸ்ரீ:

தமிழகத்தில் சிறுவர்கட்கும் ஏனையோர்க்கும் வைதிக
லௌகிக வ்யவஹாரங்களைப் போதிப்பதில்
முன்னணியில் நிற்கும்

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா.

இது இமய முதல் குமரிவரை ப்ரசுரமாகிவரும் ஒரு மாதப் பத்ரிகை.

*இதில் எத்தகைய விளம்பரங்களும் தெளிவாகவும் சுத்தமாகவும்
அழகாகவும் குறைந்த சார்ஜில் செய்துகொடுக்கப்படும்.
விளம்பர விஷயங்களும், அதன் சார்ஜும்,
கீழே காணப்படும் விலாஸத்துக்கு
அனுப்பப்படவேண்டும்.*

விளம்பரங்களுக்கு ஆர்டர்கள் தேவை.

[குறிப்பு] முன் பணம் அனுப்பப்பட்டா லன்றி விளம்பரங்கள் ப்ரசுரிக்கப்பட மாட்டா.

சார்ஜுகளின் விவரம்:—

ராப்பர் வெளிப்புறம்	பக்கம் 1-க்கு	மீ 1-க்கு	ரூ. 20.
,, உட்புறம்	,,	,,	ரூ. 15.
ஸஞ்சிகையின் உட்புறம்	,,	,,	ரூ. 10.

ஒப்பந்த (CONTRACT) விளம்பரங்களுக்குக் கட்டணம்
இன்னும் குறைவாகும்.

இங்ஙனம்:

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,
நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, தியாகராய நகர், மதராஸ்-17.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, L. Conjeeveram. Edited and Published by S. Vasudevacharia, 22, Mahalakshmi Street, Tyagarayanagar, Madras.